
# லெனின்

## தேசிய இனப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

- 5 MAR 1985

# வி. இ. லெனின்

# தேசிய இனப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
விற்பனையாளர்கள்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

© தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1979
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-188}{016(01)-79}$ 791—79

0101020000

- 5 MAR 1985
MADRAS

## பொருளடக்கம்

1. மொழிப் பிரச்சினை குறித்து மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும் . . . . . 6
2. ''தேசியக் கலாசாரம்'' . . . . . . 11
3. ''ஒன்றுகலத்தல்'' என்பது பற்றிய தேசியவாதப் பூச்சாண்டி . . . . . 18
4. ''கலாசார-தேசியத் தன்னாட்சி'' . . . 29
5. தேசிய இனங்களின் சமத்துவமும் தேசியச் சிறுபான்மையோரின் உரிமைகளும் . . . . . . . . . . . . . . 40
6. மையப்படுத்தலும் தன்னாட்சியும் . . . 48
குறிப்புகள் . . . . . . . . . . . 60
பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . 67

MADRAS

ருஷ்யாவின் பொது வாழ்வுப் பிரச்சினைகளில் தேசிய இனப் பிரச்சினை தற்போது முதன்மையானதாகி இருப்பது தெளிவாகவே தெரிகிறது. பிற்போக்குவாதத்தினுடைய தேசியவாதம் ஆக்கிரமிப்பு மிக்கதாகி வருகிறது; எதிர்ப் புரட்சி முதலாளித்துவ மிதவாதமானது தேசியவாதமாய் (முக்கியமாய் மாருஷ்யத் தேசியவாதமாகவும், மற்றும் போலிஷ், யூத, உக்ரேனிய, இன்ன பிற தேசியவாதங்களாக வும்) மாறிச் செல்கிறது; முடிவில் வெவ்வேறு ''தேசிய'' (அதாவது மாருஷ்யர்களல்லாத) சமூக-ஜனநாயகவாதி களிடையே தேசியவாத ஊசலாட்டங்கள் தீவிரமடைந்து, கட்சியின் வேலைத்திட்டத்தை மீறும் அளவுக்கு இவர்கள் சென்றிருக்கிறார்கள் — இவை யாவும், தேசிய இனப் பிரச்சினையில் நாம் இதுகாறும் செலுத்தியிருப்பதைக் காட்டிலும் அதிகக் கவனம் செலுத்துவது நமது அவசியக் கடமையாகும் என்பதை வற்புறுத்துகின்றன.

இந்தக் கட்டுரை ஒரு தனிக் குறிக்கோள் கொண்ட தாகும்: மார்க்சியவாதிகளிடத்தும் மார்க்சியவாதிகளாக விரும்புவோரிடத்தும் தேசிய இனப் பிரச்சினை குறித்துக் காணப்படும் இந்த வேலைத்திட்ட ஊசலாட்டங்களை அவற்றின் பொதுத் தொடர்புகளில் பரிசீலனை செய்வதே இக்கட்டுரையின் குறிக்கோள். சேவெர்னயா பிராவ்தா,[1] இதழ் 29ல் (1913 செப்டம்பர் 5 இதழ், மொழிப் பிரச்சினை குறித்து மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும்) தேசிய இனப் பிரச்சினையில் மிதவாதிகளது சந்தர்ப்பவாதம் குறித்துப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனது இந்தக் கட்டுரையைச் சந்தர்ப்பவாத யூதச் செய்தியேடான ஸைத்

தில்[2] திரு எஃப். லீப்மன் ஒரு கட்டுரையில் விமர்சித்துத் தாக்கினர். மறுபுறத்தில், உக்ரேனியச் சந்தர்ப்பவாதி திரு லேவ் யுர்க்கேவிச், தேசிய இனப் பிரச்சினை குறித்து ருஷ்ய மார்க்சியவாதிகளது வேலைத்திட்டத்தை விமர்சித்துள்ளார் (திஸ்வின்[3], *1913*, இதழ்கள் *7-8*). இவ்விரு எழுத்தாளர்களும் மிகப் பல பிரச்சினைகளையும் எழுப்புவதால், இவற்றுக்குப் பதிலளிக்கும் பொருட்டு நமது ஆய்வுப் பொருளின் மிகப் பல்வேறுபட்ட கூறுகளைப் பற்றியும் எடுத்துரைப்பது அவசியமாகி விடுகிறது. சேவெர்னயா பிராவ்தாவின் கட்டுரையை திரும்பவும் இங்கு வெளியிட்டு எனது பதிலைத் தொடங்குவதே உத்தமமெனநினைக்கிறேன்.

## 1. மொழிப் பிரச்சினை குறித்து மிதவாதிகளும் ஜனநாயகவாதிகளும்

காக்கசஸின் ஆளுநருடைய அறிக்கையைச் செய்தியேடுகள் பல தரம் குறிப்பிட்டுள்ளன. இந்த அறிக்கை குறிப்பிடத்தக்கது — அதனுடைய கறுப்பு-நூற்றுவர்[4] மனப்பாங்குக்காக அல்ல, தயங்கித் தடுமாறும் அதனுடைய ''மிதவாதத்துக்காக''. ஏனையவற்றினிடையே, இந்த ஆளுநர் ருஷ்யர்களல்லாத தேசிய இனங்கள் செயற்கையான முறையில் ருஷ்யமயமாக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கிறார். காக்கசஸில் ருஷ்யர்களல்லாத தேசிய இனங்களின் பிரதிநிதிகள் தமது குழந்தைகளுக்கு ருஷ்ய மொழி கற்றுத் தர தாமே முயற்சி எடுத்து வருகின்றனர். ருஷ்ய மொழிப் போதனை கட்டாயமாக்கப்படாத ஆர்மீனிய சமயச் சபை பள்ளிகளில் ருஷ்ய மொழி கற்பிக்கப்படுவது இதற்கு உதாரணமாகும்.

ருஷ்யாவில் மிகவும் விரிவாய் வினியோகமாகும் மிதவாத செய்தியேடுகளில் ஒன்றான ரூஸ்கொயெ ஸ்லோவொ[5] (இதழ் *198*) இதனைச் சுட்டிக்காட்டி, ருஷ்யாவில் ருஷ்ய மொழி மீது பகைமை உணர்ச்சி ''எழுவதற்கு முழுக்க முழுக்க காரணமாய்'' இருப்பது இம்மொழி ''செயற்கையாய்'' (''பலவந்தமாய்'' என்று அது கூறியிருக்க வேண்

டும்) திணிக்கப்படுவதுதான் என்கிற சரியான முடிவை எடுத்துரைக்கிறது.

''ருஷ்ய மொழிக்கு என்ன நேருமெனக் கவலைப்படத் தேவையில்லை. ருஷ்யா பூராவிலும் அது தனக்கு அங்கீகாரம் பெற்றுக் கொண்டுவிடும்'' என்று இந்தச் செய்தியேடு எழுதுகிறது. இது முற்றிலும் உண்மையே, ஏனெனில் ஒரே அரசில் வாழ்ந்து வரும் தேசிய இனங்களை (அவை ஒன்றுசேர்ந்து வாழ விரும்பும் வரை) பொருளாதாரப் பரிவர்த்தனையின் தேவைகளானவை பெரும்பான்மையோரது மொழியைக் கற்றுக் கொள்ளும்படி எப்போதும் நிர்ப்பந்தம் செய்யும். ருஷ்யாவில் அரசியல் அமைப்பு எந்த அளவுக்கு ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாகிறதோ, அந்த அளவுக்கு முதலாளித்துவம் வலிவாகவும் விரைவாகவும் விரிவாகவும் வளர்ச்சியடையும், அந்த அளவுக்குப் பொருளாதாரப் பரிவர்த்தனையின் அவசியத் தேவைகள் பொது வாணிப உறவுகளுக்கு அதிக வசதி வாய்ந்ததாய் இருக்கும் மொழியைக் கற்குமாறு பல்வேறு தேசிய இனங்களுக்கும் ஊக்கமளிக்கும்.

ஆனல் இந்த மிதவாதச் செய்தியேடு அவசரப்பட்டுக் கொண்டு தன்னைத் தானே முடமாக்கிக் கொள்ளவும், தனது மிதவாத முரண்பாட்டை வெளிப்படுத்திக் கொள்ளவும் முற்படுகிறது.

''ருஷ்யமயமாக்குதலை எதிர்ப்போருங்கூட ஒன்றை மறுக்கத் துணிவாரா என்பது சந்தேகம் தான்'' என்று அது எழுதுகிறது. ''ருஷ்யாவைப் போல் மிகப் பெரிய ஓர் அரசுக்கு தனியொரு ஆட்சிமொழி அவசியம் என்பதும், அம்மொழி... ருஷ்ய மொழியாகவே இருக்க முடியும் என்பதும் மறுக்க முடியாதவை.''

தர்க்கவாதம் தலைகீழாய்ப் புரட்டப்படுகிறது! சின்னஞ்சிறு சுவிட்சர்லாந்து ஒரேவொரு ஆட்சிமொழியல்ல, ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் ஆகிய மூன்று ஆட்சிமொழிகளைப் பெற்றுள்ளது—இதனுல் அதற்கு எந்தக் கேடும் ஏற்பட்டுவிடவில்லை, நன்மையே உண்டாகியிருக்கிறது. சுவிட்சர்லாந்து மக்களில் 70 சதவீதத்தினர் ஜெர்மானியர்கள் (ருஷ்யாவில் 43 சதவீதத்தினர் மாருஷ்யர்கள்), 22 சதவீதத்தினர் பிரெஞ்சுக்காரர்கள் (ருஷ்யாவில் 17 சத

விதத்தினர் உக்ரேனியர்கள்), 7 சதவீதத்தினர் இத்தாலியர்கள் (ருஷ்யாவில் 6 சதவீதத்தினர் போலிஷ்காரர்கள், 4,5 சதவீதத்தினர் பெலோருஷ்யர்கள்). சுவிட்சர்லாந்தில் இத்தாலியர்கள் பொது நாடாளுமன்றத்தில் அடிக்கடி பிரெஞ்சு மொழியில் பேசுகிறார்கள் என்றால், ஏதோ காட்டுத்தனமான போலீஸ் சட்டம் அவர்களை மிரட்டுகிறது என்பதல்ல காரணம் (அம்மாதிரியான சட்டம் சுவிட்சர்லாந்தில் இல்லை), ஜனநாயக அரசின் நாகரிகக் குடிமக்கள் பெரும்பாலோருக்குப் புரிகிற மொழியில் பேச வேண்டுமெனத் தாமே விரும்புகிறார்கள் என்பதுதான் காரணம். பிரெஞ்சு மொழி என்றதும் இத்தாலியர்களுக்கு வெறுப்பு உண்டாவதில்லை, ஏனெனில் அது நாகரிகமடைந்த சுதந்திர தேசத்தின் மொழியாக இருக்கிறதே அல்லாமல் அருவருக்கத்தக்க போலீஸ் நடவடிக்கைகள் மூலம் திணிக்கப்படும் மொழியாக இல்லை.

''மிகப் பெரிய'' ருஷ்யா—எவ்வளவோ அதிகமான வேறுபாடுகள் வாய்ந்ததும் பயங்கரமான பிற்பட்ட நிலையில் இருப்பதுமான இந்நாடு—எதற்காக ஒரு மொழி மட்டும் எந்த விதமான தனியுரிமையும் பெற்றிருக்கும் நிலைமையைப் பாதுகாத்துத் தனது வளர்ச்சிக்குத் தடையமைத்துக் கொள்ள வேண்டும்? மிதவாதக் கனவானே, நேர் மாறான முறையில்அல்லவா அது செயல்பட வேண்டும்? ருஷ்யா முன்னேற்றமடைந்து ஐரோப்பாவை எட்டிப் பிடிக்க வேண்டுமாயின், அது கூடுமான அளவுக்கு விரைவாகவும் முழுமையாகவும் வைராக்கியமாகவும் அல்லவா எந்த விதமான தனியுரிமைக்கும் முடிவு கட்ட வேண்டும்?

எல்லாத் தனியுரிமைகளும் மறைந்தொழியுமாயின், எந்த ஒரு மொழியும் திணிக்கப்படுதல் நிறுத்தப்படுமாயின், ஸ்லாவ்கள் எல்லோரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு சுலபமாகவும் சீக்கிரமாகவும் கற்றுக் கொள்வார்கள்; பொதுவான நாடாளுமன்றத்தில் பல்வேறு மொழிகளிலும் பேச்சுக்களைக் கேட்க வேண்டியிருக்கும் என்ற ''பயங்கர'' எண்ணம் அவர்களைப் பயப்படச் செய்யாது. குறிப்பிட்ட ஒரு நாட்டில், வாணிப உறவுகளின் நலன்களை முன்னிட்டு எந்த மொழி தெரிந்திருந்தால் பெரும்பாலோருக்கு அனுகூலமாய் இருக்கும் என்பதைப் பொரு

ளாதாரப் பரிவர்த்தனையின் தேவைகள் தாமாகவே தீர் மானித்துக் கொண்டுவிடும். பல்வேறு தேசிய இனங்களாலு மான அந்நாட்டு மக்கள் தாமே விரும்பி ஏற்கும் தீர்மான மானதால் அது அந்த அளவுக்கு உறுதி மிக்கதாய் இருக்கும். எந்த அளவுக்கு முரணற்ற ஜனநாயகம் நிலவு கிறதோ, அதன் விளைவாய் எந்த அளவுக்கு முதலாளித் துவ வளர்ச்சி வேகமாய் நடந்தேறுகிறதோ, அந்த அளவுக்கு இந்தத் தீர்மானம் விரைவாகவும் பரவலாகவும் ஏற்கப்படும்.

மிதவாதிகள் எல்லா அரசியல் பிரச்சினைகளையும் எப்படி அணுகுகிறார்களோ அதே விதத்தில்தான் மொழிப் பிரச் சினையையும் அணுகுகிறார்கள்—அதாவது, சாமர்த்திய மாகப் பேசிச் சரக்கை விற்கும் கபட வேடதாரிகளைப் போல் ஒரு கையை (பகிரங்கமாய்) ஜனநாயகத்திடம் தரு கிறார்கள், இன்னொன்றை(முதுகுக்குப் பின்னால்) பிரபுத்துவ வாதிகளிடமும் போலீசிடமும் தருகிறார்கள். நாங்கள் தனி யுரிமைகளை எதிர்க்கிறோம் என்று பலக்கக் கூவுகிறார்கள் மிதிவாதிகள், அதே போது திரை மறைவுக்குப் பின்னால் பிரபுத்துவவாதிகளுடன் முதலில் ஒரு தனியுரிமைக்காக வும் பிறகு இன்னொன்றுக்காகவும் பேரம் பேசுகிறார்கள்.

மிதவாத-முதலாளித்துவத் தேசியவாதம் எல்லாமே இத்தகையதுதான்—மாருஷ்ய தேசியவாதம் மட்டுமல்ல (இதன் பலாத்காரத் தன்மையின் காரணத்தாலும், திரு வாளர்கள் புரிஷ்கேவிச்சுகளுடன் இதற்குள்ள இரத்த உற வின் காரணத்தாலும் இதுவே யாவற்றிலும் படுமோச மானது), போலிஷ், யூத, உக்ரேனிய, ஜார்ஜிய முதலான ஏனைய எல்லாத் தேசியவாதங்களும் இப்படித்தான். எல்லாத் தேசிய இனங்களது முதலாளித்துவ வர்க்கங் களும்—ஆஸ்திரியாவிலும் ருஷ்யாவிலும்—''தேசியக் கலா சாரம் என்று கோஷமிட்டுக் கொண்டு மெய் நடப்பில் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தியும், ஜனநாயகத்தை வலுவிழக்கச் செய்தும், மக்களது உரிமைகளையும் மக்களது சுதந்திரத்தையும் விற்பதற்காகப் பிரபுத்துவ வாதிகளிடம் விலை பேசிப் பேரம் புரிந்தும் வருகிறார்கள்.

தொழிலாளி வர்க்க ஜனநாயகத்தின் கோஷம் ''தேசியக் கலாசாரம்'' அல்ல; ஜனநாயகத்தின், உலகு தழு

விய தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசியக் கலாசாரம் ஆகும். எல்லா விதமான ''நேர்முக'' தேசிய இன வேலைத்திட்டங்களையும் கொண்டு முதலாளித்துவ வர்க்கம் மக்களை ஏமாற்றட்டும். வர்க்க உணர்வு படைத்த தொழிலாளி அதற்குக் கூறும் பதில் இதுதான்: தேசிய இனப் பிரச்சினைக்குரிய தீர்வு (முதலாளித்துவ உலகில், இலாபத்துக்கும் சண்டை சச்சரவுக்கும் சுரண்டலுக்குமான உலகில், பொதுவாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்படியான அளவுக்கு) ஒன்றே ஒன்றுதான்; முரணற்ற ஜனநாயகம் ஒன்றேதான் அந்தத் தீர்வு.

இதற்கு நிரூபணம்: மேற்கு ஐரோப்பாவில் சுவிட்சர் லாந்து (முதிய கலாசாரத்தையுடைய நாடு); கிழக்கு ஐரோப்பாவில் பின்லாந்து (இளங் கலாசாரத்தையுடைய நாடு).

தொழிலாளி வர்க்க ஜனநாயகத்தின் தேசிய இன வேலைத்திட்டம் வருமாறு: எந்த தேசத்துக்கும் எந்த மொழிக்கும் எவ்விதமான தனியுரிமைகளும் இல்லவே இல்லை, தேசங்களது அரசியல் சுயநிர்ணயப் பிரச்சினை, அதாவது அவை அரசுகளாகப் பிரிந்து செல்லும் பிரச்சினை, முழு அளவுக்குச் சுதந்திரமான, ஜனநாயகமான வழியில் தீர்க்கப்படுதல்; எந்த ஒரு தேசத்துக்கும் எந்த விதமான சிறப்புரிமையும் அளிப்பதாகவோ, தேசங்களது சமத்துவத்துக்கு அல்லது தேசிய சிறுபான்மையினரது உரிமைகளுக்கு ஊறு செய்வதாகவோ இருக்கும்படியான எந்த நடவடிக்கையும் (ஸேம்ஸ்துவோ,[6] நகர, சமுதாய, இன்ன பிற) சட்ட விரோதமானதென்றும் செயலுக்கு வர முடியாததென்றும் பிரகடனம் செய்து, இம்மாதிரியான நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானதாய் அறிவிக்கப்பட்டு நீக்கப்பட வேண்டும் என்றும் இதனைச் செயல்படுத்த முயலுவோர் குற்றவாளிகள் எனத்தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கோருவதற்கு எந்தக் குடிமகனுக்கும் உரிமை அளித்திடும் சட்டம் ஒன்றை அனைத்து அரசுக்குமாகப் பிறப்பித்தல்.

மொழிப் பிரச்சினை குறித்தும் இதையொத்த பிற பிரச்சினைகள் குறித்தும் பல்வேறு முதலாளித்துவக் கட்சிகளும் நடத்தும் தேசியவாத சச்சரவுகளுக்கு எதிராகத் தொழி

லாளி வர்க்க ஜனநாயகம் என்ன கோருகிறது என்ருல்: எந்த விதமான முதலாளித்துவத் தேசியவாதத்துக்கும் நேர் மாருன முறையில் எல்லாத் தேசிய இனங்களேயும் சேர்ந்த தொழிலாளர்களும் எல்லாத் தொழிலாளி வர்க்க நிறு வனங்களிலும்—தொழிற்சங்கங்களிலும் கூட்டுறவுக் கழ கங்களிலும் நுகர்வாளர் சங்கங்களிலும் கல்விக் கழ கங்களிலும் ஏனேய எல்லாவற்றிலும்—நிபந்தனேயின்றி ஐக்கியமடையவும் ஒருங்கிணேயவும் வேண்டும். இம்மாதிரி யான ஐக்கியத்தாலும் ஒருங்கிணேவாலும் மட்டுமே ஜன நாயகத்துக்காக முனேந்து நின்று பாடுபட முடியும், மூலதனத் துக்கு எதிராய்—மூலதனம் ஏற்கெனவே சர்வதேசியத் தன்மையதாகியுள்ளது, மேலும் மேலும் ஆகி வருகிறது—தொழிலாளர்களது நலன்களேப் பாதுகாத்து நிற்க முடியும், எல்லாத் தனியுரிமைகளுக்கும் எல்லாச் சுரண்ட லுக்கும் அன்னியமான புதிய வாழ்க்கை முறையை நோக்கி மனித குலம் வளர்ச்சியுறுவதற்காகப் போராட முடியும்.

## 2. "தேசியக் கலாசாரம்"

வாசகர் காண்பது போல, **சேவெர்னயா பிராவ்தா**வில் வெளிவந்த கட்டுரை ஓர் உதாரணத்தை எடுத்துக் கொண்டு, அதாவது ஆட்சி மொழிப் பிரச்சினேயை எடுத்துக் கொண்டு, மிதவாத முதலாளித்துவ வர்க்கத் தாரின் முன்னுக்குப் பின் முரணுன நிலேயையும் சந்தர்ப்ப வாதத்தையும் தெளிவுபடுத்திற்று. தேசிய இனப் பிரச் சினேயில் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தார் பிரபுத் துவவாதிகளுக்கும் போலீசுக்கும் கை கொடுக்கின்றனர். ஆட்சி மொழிப் பிரச்சினேயை அன்னியில் இதையொத்த வேறு பல பிரச்சினேகளிலும் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தார் இதே போல் துரோகமாகவும் வஞ்சகமாக வும் அசட்டுத்தனமாகவும் (மிதவாதத்தின் நலன்களது கண்ணேட்டத்திலிருந்துங்கூட) நடந்து கொள்வதை எல்லோரும் புரிந்து கொள்வார்கள்.

இதிலிருந்து பெறப்படும் முடிவு என்ன? மிதவாத-முத லாளித்துவத் தேசியவாதம் எல்லாம், தொழிலாளர்கள்

மத்தியில் மிகப் பெரிய அளவில் சீர்கேட்டை உண்டாக்கு கிறது, சுதந்திர இலட்சியத்துக்கும் பாட்டாளி வர்க்கப் போராட்ட இலட்சியத்துக்கும் மிகப் பெரிய அளவில் தீங்கு இழைக்கிறது என்பதுதான். இந்த முதலாளித்துவ (மற்றும் முதலாளித்துவ-பிரபுத்துவ) போக்கானது ''தேசியக் கலாசாரம்'' என்ற கோஷத்துக்குப் பின்னுல் ஒளிந்து கொண்டு இருப்பதால், இது மேலும் அதிக அபாயம் விளைவிப்பதாகி விடுகிறது. மாருஷ்ய, போலிஷ், யூத, உக்ரேனிய, இப்படிப் பல விதமான தேசிய கலா சாரத்தின் பெயரில்தான் கறுப்பு-நூற்றுவரும் சமயக் குருமார்களும் மற்றும் எல்லாத் தேசிய இனங்களது முதலாளித்துவ வர்க்கத்தாரும் தமது இழிவான, பிற்போக்குவாத காரியங்களைச் செய்து வருகிருர்கள்.

மார்க்சியக் கோணத்தில் அதாவது வர்க்கப் போராட் டத்தின் கண்ணேட்டத்திலிருந்து பார்ப்போமாயின், கோஷங்களை அர்த்தமற்ற ''பொதுக் கோட்பாடுகளோ டும்'' பகட்டுப் பேச்சுக்களோடும் தொடர்களோடும் அல் லாமல் வர்க்கங்களது நலன்களோடும் கொள்கைகளோடும் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், இன்றைய தேசிய வாழ்க் கையின் உண்மைகள் மேற்கூறியவாறே உள்ளன.

தேசியக் கலாசாரம் என்னும் கோஷம் முதலாளித்துவ (அடிக்கடி கறுப்பு-நூற்றுவர், சமயக் குருமார்கள் ஆகியோரதுங்கூட) ஏமாற்றுகும். நம்முடைய கோஷம்: ஜனநாயகத்தின், உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத் தின் சர்வதேசியக் கலாசாரம்.

புந்துக்காரரான[7] திரு லீப்மன் இங்கே சண்டைக்கு ஓடி வருகிருர், நான் தப்ப முடியாதபடி பின்வருமாறு பொழிந்து தள்ளி என்னைத் தகர்த்திடுகிருர்:

''தேசிய இனப் பிரச்சினை குறித்துச் சொற்ப அள வேனும் அறிந்தவர் எவரும் சர்வதேசியக் கலாசாரம் என்பது தேசியமல்லாத கலாசாரம் (தேசிய வடிவம் இல் லாத கலாசாரம்) அல்ல என்பதைத் தெரிந்து வைத்திருப் பார்; தேசியமல்லாத கலாசாரம் என்பது ருஷ்ய, யூத அல்லது போலிஷ் கலாசாரமாய் இருக்க முடியாதது, தூய கலாசாரமாய் மட்டுமே இருப்பது, ஆகவே அபத்தமாய் இருப்பது; சர்வதேசியக் கருத்துக்கள், தொழிலாளி பேசு

கிற மொழிக்கும் தொழிலாளி வாழ்கிற ஸ்தூலமான தேசிய நிலைமைகளுக்கும் ஏற்றவையாக இருக்கும்போது மட்டுமே, அவை தொழிலாளி வர்க்கத்தை ஈர்ப்பனவாய் இருக்க முடியும்; தொழிலாளி அவரது தேசிய கலாசாரத்தின் நிலைமை குறித்தும் வளர்ச்சி குறித்தும் கருத்தில்லாதவராய் இருக்கக் கூடாது; ஏனெனில் தேசிய கலாசாரத்தின் மூலம்தான், அதன் மூலம் மட்டும்தான் அவர் 'ஜனநாயகத்தின், உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசியக் கலாசாரத்தில்' பங்கெடுத்துக் கொள்ள முடிகிறது. இது எல்லோரும் அறிந்ததே, ஆனால் வி. இ. இதைப் புரிந்துகொள்ள விரும்பவில்லை...''

இனமாதிரியான எடுத்துக்காட்டாய் விளங்கும் இந்தப் **புந்து** வாதம் குறித்து ஆலோசித்துப் பாருங்கள். நான் முன்வைத்த மார்க்சிய ஆய்வுரையினைத் தகர்த்திடும் நோக்கத்துடன் இந்த வாதம் அளிக்கப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். ''தேசிய இனப் பிரச்சினையை நன்கு அறிந்தவரது'' பாவனையுடன் அபாரத் தன்னம்பிக்கை வாய்ந்த தோரணையோடு இந்தப் **புந்து**க்காரர் சர்வசாதாரண முதலாளித்துவக் கருத்தோட்டங்களைக் ''கீர்த்திமிக்க'' சத்திய வாக்குகளாய் நமக்கு அளித்திடுகிறார்.

எனதருமைப் **புந்து**க்காரரே, சர்வதேசியக் கலாசாரம் என்பது தேசியமல்லாத கலாசாரம் அல்ல என்பது மெய்தான். அது தேசியமல்லாத கலாசாரமாகும் என்று யாரும் சொல்லவில்லை. போலிஷ், யூத, ருஷ்ய அல்லது பிற எதுவுமல்லாத ''தூய'' கலாசாரத்தை யாரும் பிரகடனம் செய்யவில்லை. உங்களது வெற்றுச் சொல்வீச்சுகள் எல்லாம், வாசகரது கவனத்தைக் குலைத்து, கிணுகிணுக்கும் சொற்களால் பிரச்சினையைக் குழப்புவதற்கான முயற்சியே அன்றி வேறல்ல.

தேசியக் கலாசாரம் **ஒவ்வொன்றிலும்** — வளர்ச்சியடைந்த வடிவில் இல்லை என்றாலும்—ஜனநாயக, சோஷலிசக் கலாசாரத்தின் **கூறுகள்** எப்படியும் இருக்கவே செய்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு தேசத்திலும் உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்கள் திரளினர் இருக்கிறார்கள், இவர்களது வாழ்க்கை நிலைமைகள் தவிர்க்க வொண்ணாதவாறு ஜனநாயகத்தின், சோஷலிசத்தின் சித்தாந்தத்தை உதித்தெழச் செய்கின்றன. ஆனால் ஒவ்வொரு

தேசத்திலும் முதலாளித்துவக் கலாசாரமும் இருக்கிறது (பெரும்பாலான தேசங்களில் கறுப்பு-நூற்றுவர், சமயக் குருமார் கலாசாரமும் இருக்கிறது) — ''கூறுகளின்'' வடிவில் அல்ல, ஆதிக்கம் செலுத்தும் கலாசாரத்தின் வடிவில் இருக்கிறது. ஆகவே பொதுவான ''தேசியக் கலாசாரம்'' என்பது நிலப்பிரபுக்கள், சமயக் குருமார்கள், முதலாளித்துவ வர்க்கத்தார் ஆகியோரது கலாசாரம் ஆகும். இந்த அடிப்படையான உண்மையை — மார்க்சியவாதிக்கு அரிச்சுவடிப் பாடமான இதனை—புந்துக்காரர் பின்னணியின் இருட்டில் இருத்தி விடுகிறார், தமது சொல்வீச்சுகளால் ''மூடி மறைத்து விடுகிறார்'', அதாவது வர்க்கப் பிளவினை அம்பலப்படுத்தித் தெளிவாகத் தெரியச் செய்வதற்குப் பதில் அதை வாசகரது கண்ணில் படாதவாறு இருட்டடிப்பு செய்கிறார். புந்துக்காரர் உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தவரைப் போல் செயல்படுகிறார் —முதலாளித்துவ வர்க்கத்தாரின் நலன்கள் அனைத்தும் தான் வர்க்கச் சார்பற்ற தேசியக் கலாசாரத்தில் நம்பிக்கையைப் பரவச் செய்ய வேண்டுமெனக் கோருகிறது.

''ஜனநாயகத்தின், உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசியக் கலாசாரம்'' என்ற கோஷத்தை முன்வைக்கும் நாம்,தேசியக் கலாசாரம் ஒவ்வொன்றின் இடமிருந்தும் அதன் ஜனநாயக, சோஷலிசக் கூறுகளை மட்டும்தான் எடுத்துக் கொள்கிறோம்; ஒவ்வொரு தேசத்துக்குமான முதலாளித்துவக் கலாசாரத்தையும் முதலாளித்துவத் தேசியவாதத்தையும் நிபந்தனையின்றி எதிர்ப்பதற்காக மட்டும்தான் அவற்றை எடுத்துக் கொள்கிறோம். எந்த ஜனநாயகவாதியும், இன்னும் அதிகமாய் எந்த மார்க்சியவாதியும் மொழிகளது சமத்துவத்தை மறுக்கவோ, சொந்த மொழியிலே ''சொந்த நாட்டு'' முதலாளித்துவ வர்க்கத்தாருடன் வாக்குவாதம் புரிவதும் ''சொந்த நாட்டு'' விவசாயிகளிடையிலும் குட்டி முதலாளித்துவப் பகுதியோரிடையிலும் சமயக் குருமார்-எதிர்ப்பு, அல்லது முதலாளித்துவ-எதிர்ப்புக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதும் அவசியமென்பதை மறுக்கவோ இல்லை. இதெல்லாம் கூறாமலே விளங்குகிறவை. ஆனால் புந்துக்காரர் இந்த மறுக்க முடியாத உண்மைகளைப்

பயன்படுத்தி, விவாதத்திலுள்ள விவகாரத்தை, அதாவது மெய்யான பிரச்சினையை மூடி மறைக்கிறார்.

மார்க்சியவாதியாக இருப்பவர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தேசியக் கலாசாரம் என்ற கோஷத்தை முன்வைப்பது அனுமதிக்கப்படக் கூடியதா? அல்லது அவர் பிராந்திய, தேசியத் தனி இயல்புகளுக்குத் தம்மைத் ''தகவமைத்துக் கொண்டு'', இந்தக் கோஷத்துக்கு **எதிராய்** எல்லா மொழிகளிலும் தொழிலாளர்களது **சர்வதேசியம்** என்ற கோஷத்தை முன்வைத்துப் பிரசாரம் செய்யக் கடமைப்பட்டவரா?—இதுதான் இங்குள்ள பிரச்சினை.

''தேசியக் கலாசாரம்'' என்ற கோஷத்தின் உட்பொருள் நிர்ணயிக்கப்படுவது, ''சர்வதேசியக் கலாசாரம் இதன் மூலம் வளர்ந்திடும் என்பதே'' இக்கோஷத்தின் அர்த்தமென''விளக்கம் கூறுவதாய்'' யாரோ சில அறிவுத் துறையினர் அளிக்கும் வாக்குறுதியாலோ, அவர்கள் தெரிவிக்கும் நல்ல உத்தேசத்தாலோ அல்ல. இவ்விதம் இதனைக் கொள்வது சிறுபிள்ளைத்தனமான அகநிலை நோக்கே ஆகும். தேசியக் கலாசாரம் என்ற கோஷத்தின் உட்பொருள், குறிப்பிட்ட நாட்டிலும் மற்றும் உலகின் எல்லா நாடுகளிலும் எல்லா வர்க்கங்களுக்கும் இடையிலான புறநிலை எதார்த்த உறவுகளால் நிர்ணயிக்கப் படுகிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் தேசியக் கலாசாரம் **கண்கூடான உண்மை** ஆகும் (தவிரவும், முதலாளித்துவ வர்க்கம் எங்கும் நிலப்பிரபுக்களோடும் சமயக் குருமார்களோடும் உடன்பாடுகள் செய்து கொள்வதைத் திரும்பவும் குறிப்பிடுகிறேன்). ஆக்கிரமிப்பு வாய்ந்த முதலாளித்துவ தேசியவாதமானது, தொழிலாளர்களை முதளாளித்துவ வர்க்கத்தாருக்கு அடிபணிந்து நடக்க வைப்பதற்காக அவர்களை மதிமயங்கச் செய்கிறது, அசட்டு ஏமாளிகளாக்குகிறது, ஒன்றுசேராதவாறு பிளவுபடுத்துகிறது—இதுதான் இக்காலத்தின் அடிப்படையான உண்மை.

பாட்டாளி வர்க்கத்துக்குப் பணிபுரிய விரும்புவோர் எல்லாத் தேசங்களையும் சேர்ந்த தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்ய வேண்டும், முதலாளித்துவத் தேசிய

வாதத்தை—''சொந்த தேசத்தினுடையது'' ஆயினும், அன்னிய தேசத்தினுடையது ஆயினும்—எதிர்த்துச் சிறிதும் பிறழாமல் போராட வேண்டும். தேசியக் கலாசாரம் என்ற கோஷத்தை ஆதரிப்போர் இருக்க வேண்டிய இடம் தேசியவாதக் குட்டி முதலாளித்துவப் பகுதியோர் மத்தியிலே அன்றி, மார்க்சியவாதிகள் மத்தியில் அல்ல.

ஸ்தூலமான ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். மாருஷ்ய மார்க்சியவாதியான ஒருவர் தேசிய, மாருஷ்ய கலாசாரம் என்ற கோஷத்தை ஏற்றுக் கொள்ள முடியுமா? முடியாது. ஏற்றுக் கொள்கிறவர் எவரும் தேசியவாதிகளது அணிகளில் இருக்க வேண்டுமே அன்றி, மார்க்சியவாதிகளது அணிகளில் அல்ல. நமது பணி மாருஷ்யர்களது ஆதிக்கம் செலுத்தும், கறுப்பு-நூற்றுவர், முதலாளித்துவத் தேசியக் கலாசாரத்தை எதிர்த்துப் போராடுவதும், முழுக்க முழுக்க சர்வதேசிய மனப்பாங்கிலும் ஏனைய நாடுகளது தொழிலாளர்களுடன் மிக நெருங்கிய கூட்டுறவு கொண்டு வளர்ச்சியடைவதும்தான்—இதற்குரிய ஆரம்பக் கூறுகள் நமது ஜனநாயக, தொழிலாளி வர்க்க இயக்க வரலாற்றிலேயே உள்ளன. உங்களது சொந்த மாருஷ்ய நிலப்பிரபுக்களையும் முதலாளித்துவ வர்க்கத்தாரையும் எதிர்த்துப் போராடுங்கள்; சர்வதேசியத்தின் பெயரில் அவர்களது ''கலாசாரத்தை'' எதிர்த்துப் போராடுங்கள்; இப்படிப் போராடுகையில் புரிஷ்கேவிச்சுகளின், ஸ்துரூவேக்களின் தனி இயல்புகளைக் கணக்கில் எடுத்துத் ''தகவமைத்துக் கொள்ளுங்கள்''—இதுதான் உங்களது பணி; தேசியக் கலாசாரம் என்ற கோஷத்துக்காகப் பிரசாரம் செய்வதோ, அதற்கு இடங் கொடுப்பதோ அல்ல.

யாவற்றிலும் அதிகமாய் ஒடுக்கப்பட்டும் வேட்டையாடப்பட்டும் வருகிற தேசிய இனத்தவரான யூதர்களுக்கும் இதுவேதான் தக்க செயல் முறை. யூதத் தேசியக் கலாசாரம்—அது யூதக் குருமார்கள், முதலாளிகளது கோஷம்; நமது பகைவர்களது கோஷம். ஆனல் யூதக் கலாசாரத்திலும் ஒட்டுமொத்தமாய் யூத வரலாற்றிலும் பிற கூறுகளும் இருக்கின்றன. உலகிலுள்ள ஒரு கோடி ஐந்து லட்சம் யூதர்களில் ஏறத்தாழ பாதிப் பேர் கலீஷியாவிலும் ருஷ்யாவிலும் வசிக்கிருர்கள். இரண்டும் பிற்

பட்ட, அரை-அநாகரிக நாடுகள் — யூதர்கள் இங்கே பல வந்தமாய் ஒரு தனி சாதியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னொரு பாதிப் பேர் நாகரிக உலகில் வசிக்கிறார்கள், அங்கே யூதர்கள் தனி சாதியாகப் பிரித்துத் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை. அங்கே யூதக் கலாசாரத்தின் மாபெரும் அனைத்துலக-முற்போக்கு இயல்புகள் தெளிவாகவே புலப்படுகின்றன: அதன் சர்வ தேசியமும், இச்சகாப்தத்தின் முற்போக்கு இயக்கங்களுடனான அதன் ஒத்துணர்வும் குறிப்பிடத்தக்கவை (ஜனநாயக, பாட்டாளி வர்க்க இயக்கங்களில் யூதர்களின் சதவீதம் மக்கள் தொகையில் யூதர்களின் சதவீதத்தைக் காட்டிலும் எங்கும் அதிகமாகவே இருக்கிறது).

யூதத் ''தேசியக் கலாசாரம்'' என்ற கோஷத்தை முன் வைப்பவர் யாராய் இருப்பினும் (அவருடைய உத்தேசம் எவ்வளவுதான் நல்லதாய் இருப்பினும்), அவர் பாட்டாளி வர்க்கத்தின் பகைவரும், யூதர்களிடையே காலங் கடந்ததாகவும் தனிச் சாதித் தன்மையதாகவும் இருப்பதனைத்தின் ஆதரவாளரும், யூதக் குருமார்களின், முதலாளிகளின் கூட்டாளியுமே ஆவார். இதற்கு மாறாய், சர்வதேச மார்க்சிய நிறுவனங்களில் ருஷ்ய, லித்துவேனிய, உக்ரேனியத் தொழிலாளர்களோடும் ஏனைய தேசிய இனத் தொழிலாளர்களோடும் ஒன்றுசேர்ந்து, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசியக் கலாசாரத்தை உருவாக்குவதற்குத் தமக்குரிய பங்கை (ருஷ்யன் மற்றும் யூதப் பாணியில்) ஆற்றுகிற அந்த யூத மார்க்சியவாதிகள்—புந்தின் பிரிவினைவாதத்துக்கு நேர் மாறாய்—''தேசியக் கலாசாரம்'' என்ற கோஷத்தை எதிர்த்துப் போராடி, யூத இனத்தின் மிகச் சிறந்த மரபுகளைத் தொடர்ந்து பாதுகாக்கிறார்கள்.

முதலாளித்துவ தேசியவாதமும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியமும் இணக்கம் காண முடியாத பகைமை கொண்ட இருவேறு கோஷங்களாகும். இவை முதலாளித்துவ உலகம் முழுமையிலும் நிலவும் மாபெரும் இருவேறு வர்க்க முகாம்களுக்கு ஏற்ப அமைந்து, தேசிய இனப் பிரச்சினையில் இருவேறு கொள்கைகளின் (இல்லை, இருவேறு உலகக் கண்ணோட்டங்களின்) வெளிப்பாடுகளாய் விளங்குகிறவை. புந்துக்காரர்கள் தேசியக் கலாசாரம் என்ற

கோஷத்தை முன்வைத்து, ''கலாசார-தேசியத் தன்னாட்சி''[8] என்பதாக அவர்கள் அழைக்கும் முழுமையான ஒரு திட்டத்தையும் நடைமுறை வேலைத்திட்டத்தையும் அதன் மீது கட்டியமைப்பதன் மூலம் தொழிலாளர்கள் மத்தியில் உண்மையில் முதலாளித்துவ தேசியவாதத்தின் கைக்கருவிகளாகச் செயல்படுகிறார்கள்.

## 3. "ஒன்றுகலத்தல்" என்பது பற்றிய தேசியவாதப் பூச்சாண்டி

ஒன்றுகலத்தலைப் பற்றிய பிரச்சினை, அதாவது தேசியத் தனியியல்புகளை இழந்து வேறொரு தேசிய இனமாக மாற்றமுறுவது பற்றிய பிரச்சினை, புந்துக்காரர்களுக்கும் அவர்களது ஆதரவாளர்களுக்கும் உரிய தேசியவாத ஊசலாட்டங்களின் விளைவுகளை எடுப்பாகத் தெரியச் செய்கிறது.

திரு லீப்மன் புந்துக்காரர்களது வழக்கமான வாதங்களை—அல்லது தந்திரங்களை என்றால் பொருத்தமாயிருக்கும்—விசுவாசத்துடன் தெரிவித்தும் திருப்பிக் கூறியும் வருகிறவர். குறிப்பிட்ட ஒரு நாட்டின் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஒன்றுபட்ட தொழிலாளர் நிறுவனங்களில் ஐக்கியமடையவும் ஒருங்கிணையவும் வேண்டுமென்ற கோரிக்கையானது (சேவெர்னயா பிராவ்தா கட்டுரையின் முடிவுப் பகுதியைப் பார்க்கவும்) ''ஒன்றுகலத்தலாகிய பழைய கதையே'' ஆகும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

சேவெர்னயா பிராவ்தா கட்டுரையின் முடிவுப் பகுதி குறித்துக் கருத்துரைக்கும் திரு லீப்மன், ''ஆகவே, நீங்கள் எந்தத் தேசிய இனத்தைச் சேர்ந்தவர் என்று கேட்டதும், தொழிலாளியானவர் நான் சமூக-ஜனநாயகவாதி என்றே பதிலளிக்க வேண்டும்'' என்பதாகக் கூறுகிறார்.

நமது புந்துக்காரர் இதனை மிக உயர்ந்த விகடமாகக் கருதுகிறார். ஆனால் உண்மையில் அவர், ''ஒன்றுகலத்தலைப்'' பற்றிய இம்மாதிரியான விகடங்களையும் கூச்சல்களையும் முரணற்ற ஜனநாயகக் கோஷமும் மார்க்சியக் கோஷமுமான ஒன்றுக்கு எதிராகக் குறி பார்த்து எழுப்பு

வதன் மூலம் தம்மைத் தாமே அறவே அம்பலப்படுத்திக் கொண்டு விடுகிருர்.

வளர்ந்து செல்லும் முதலாளித்துவமானது, தேசிய இனப் பிரச்சினையில் இரண்டு வரலாற்றுப் போக்குகளை அறிந்திருக்கிறது. ஒன்று: தேசிய வாழ்க்கையும் தேசிய இயக்கங்களும் துயிலெழுதலும்; எல்லா விதமான தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராய் போராட்டம் மூளுதலும்; தேசிய அரசுகள் அமைக்கப்படுதலும். இரண்டாவது: எல்லா வடிவங்களிலும் தேசங்களிடையே ஒட்டுறவு வளர்தலும், மேலும் மேலும் துரிதமாதலும்; தேசியப் பிரிவினைச் சுவர்கள் தகர்க்கப்படுதலும்; மூலதனத்தின், பொதுவாகப் பொருளாதார வாழ்வின், அரசியல், விஞ் ஞானம் முதலானவற்றின் சர்வதேச ஒற்றுமை உண் டாக்கப்படுதலும்.

இவ்விரு போக்குகளும் முதலாளித்துவத்துக்குரிய உலகு தழுவிய விதியாகும். முன்னது முதலாளித்துவ வளர்ச் சியின் ஆரம்பத்தில் ஆதிக்க நிலையில் உள்ளது. பின்னது முதிர்ச்சியடைந்து சோஷலிச சமுதாயமாக உருமாற்றம் பெறுவதை நோக்கிச் செல்லுகின்ற முதலாளித்துவத்தின் இயல்பினை வெளிப்படுத்துவதாகும். மார்க்சியவாதிகளது தேசிய இன வேலைத்திட்டம் இவ்விரு போக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பின்வருவனவற்றுக்காகப் பாடுபடுகிறது: முதலாவதாக, தேசிய இனங்களின், மொழிகளின் சமத்துவத்துக்காகவும், இங்கு எந்தவித மான தனியுரிமைகளும் அனுமதிக்கப்படலாகாது என்பதற் காகவும், (மற்றும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும்—இது பற்றிப் பிற்பாடு தனியே பரிசீலிப் போம்); இரண்டாவதாக, சர்வதேசியம் என்னும் கோட் பாட்டுக்காகவும், முதலாளித்துவ தேசியவாதத்தால்—மிக மிக நயமானதாலுங்கூட—பாட்டாளி வர்க்கம் நச்சுப் படுத்தப்படுவதை எதிர்த்து இணக்கத்துக்கு இடமில்லாப் போராட்டம் நடத்த வேண்டும் என்பதற்காகவும்.

''ஒன்றுகலத்தலை'' எதிர்த்து நமது புந்துக்காரர் விண்ணதிரக் கத்துவதன் அர்த்தம் என்ன என்கிற கேள்வி எழுகிறது. தேசிய இனங்கள் ஒடுக்கப்படுவதையோ, எந்த ஒரு தேசிய இனத்துக்குமான தனியுரிமைகளையோ இங்கு

அவர் மனதிற் கொண்டிருக்க முடியாது, ஏனெனில், ''ஒன்று கலத்தல்'' என்னும் சொல் இங்கு கொஞ்சமும் பொருந்தாது; மற்றும் எல்லா மார்க்சியவாதிகளும், தனிப்பட்ட முறையிலும் அதிகாரபூர்வமாய் ஒன்றுபட்ட முழுமையிலும், திட்டவட்டமாகவும் சந்தேகத்துக்கு இடமின்றியும் தேசிய இனங்களுக்கு எதிரான இம்மியளவு வன்முறையையும், அவை ஒடுக்கப்படுவதையும், அவற்றின் சமத்துவமற்ற நிலையையும் கண்டிப்பவர்கள் ஆவர்; முடிவில், புந்துக்காரர் தாக்கியுள்ள சேவெர்னயா பிராவ்தா கட்டுரையில் இந்தப் பொதுவான மார்க்சியக் கருத்து மிகவும் தீர்மானமாய் வலியுறுத்திக் கூறப்படுகிறது.

இல்லை, தட்டிக் கழிப்பது இங்கு சாத்தியமன்று. திரு லீப்மன் ''ஒன்றுகலத்தலைக்'' கண்டிக்கையில் அவர் மனதில் உள்ளது வன்முறையும் அல்ல, சமத்துவமற்ற நிலையும் அல்ல, தனியுரிமைகளும் அல்ல. எல்லா வித வன்முறையும் சமத்துவமின்மையும் நீக்கப்பட்டபின், ஒன்றுகலத்தல் என்னும் கருத்தில் உண்மையான எதுவும் எஞ்சியிருக்கிறதா?

இருக்கிறது, அதில் சந்தேகத்துக்கு இடமில்லை. எஞ்சியிருப்பது முதலாளித்துவத்தின் உலக வரலாற்று வழிப்பட்ட போக்கு—தேசியப் பிரிவினைச் சுவர்களைத் தகர்த்திடுதலும் தேசிய வேறுபாடுகளை மறையச் செய்தலும் தேசிய இனங்களை ஒன்றுகலக்க வைப்பதுமான அந்தப் போக்கு. கழிந்து செல்லும் ஒவ்வொரு பத்தாண்டையும் தொடர்ந்து இந்தப் போக்கு மேலும் மேலும் வலிமை வாய்ந்ததாகி வருகிறது. முதலாளித்துவத்தை சோஷலிசமாக உருமாறச் செய்யும் மாபெரும் உந்து சக்திகளில் ஒன்றாகும் இது.

தேசிய இனங்களின், மொழிகளின் சமத்துவத்தை அங்கீகரிக்காத, அதற்காகப் போராடாத எவரும், எல்லா விதமான தேசிய இன ஒடுக்குமுறையையும் சமத்துவமின்மையையும் எதிர்த்துப் போராடாத எவரும் மார்க்சியவாதி அல்ல, ஜனநாயகவாதியுங்கூட அல்ல. அது சந்தேகத்துக்கு இடமில்லாதது. ஆனால் பிறிதொரு தேசிய இனத்தைச் சேர்ந்த மார்க்சியவாதி ''ஒன்றுகலத்தலை'' ஆதரித்து நிற்பதாகச் சொல்லி அவரை நிந்தனை செய்யும் போலி மார்க்சியவாதி தேசியவாத அற்பரே ஆவார் என்

பதும் அதே போலச் சந்தேகத்துக்கு இடமில்லாததுதான். மதிக்கத்தகாத இவ்வகையினரைச் சேர்ந்தவர்களே ஆவர் புந்துக்காரர்கள் எல்லோரும், மற்றும் (விரைவில் நாம் காணப் போவது போல) திருவாளர்கள் லே. யுர்க்கேவிச், தொன்த்ஸோவ் வகையறுக்களை ஒத்த உக்ரேனிய தேசியவாத-சோஷலிஸ்டுகள் எல்லோரும்.

இந்தத் தேசியவாத அற்பர்களின் கருத்தோட்டங்கள் எவ்வளவு பிற்போக்கானவை என்பதை ஸ்தூலமாகத் தெரியும்படிக் காட்டுவதற்காக மூன்று வகைப்பட்ட உண்மைகளை எடுத்துரைக்கிறோம்.

பொதுவாக ருஷ்யாவிலுள்ள யூதத் தேசியவாதிகளும் குறிப்பாக புந்துக்காரர்களும்தான், ருஷ்யாவின் வைதிக மார்க்சியவாதிகள் ''ஒன்றுகலத்தலை'' ஆதரிப்பதாகச் சொல்லி இவர்களுக்கு எதிராய் மிகவும் அதிகமாய்க் கூச்சலிடுகிறவர்கள். ஆயினும் மேலே தரப்பட்ட புள்ளி விவரங்கள் காட்டுவது போல், உலகெங்கும் உள்ள ஒரு கோடி 50 லட்சம் யூதர்களில் ஏறத்தாழ பாதிப் பேர் நாகரிக உலகில், ''ஒன்றுகலத்தலுக்கு'' மிக அதிக அளவுக்குச் சாதகமாய் அமைந்த நிலைமைகளில் வாழ்கிறார்கள். அதே போது பாக்கியமற்றவர்களாய் ஒடுக்கப்பட்டு உரிமைகள் இல்லாமல் ருஷ்யாவிலும் கலீஷியாவிலும் (ருஷ்ய, போலிஷ்) புரிஷ்கேவிச்சுகளின் காலுக்கடியில் மிதித்து நசுக்கப்படும் யூதர்கள், ''ஒன்றுகலத்தலுக்கு'' மிகக் குறைவாகவே அனுமதிக்கும் நிலைமைகளில், தனித்து ஒதுக்கப்படுதல் மிகுதியாகி ''வரம்பிடப்பட்ட தனிச் சேரிகள்'',[9] ''சதவீத நியமங்கள்''[10] போன்ற பல புரிஷ்கேவிச் சிறப்புகளுங்கூட இருந்து வரும் நிலைமைகளில் வாழ்கிறார்கள்.

நாகரிக உலகில் உள்ள யூதர்கள் ஒரு தேசிய இனமாய் இருக்கவில்லை, பெருமளவுக்கு அவர்கள் ஒன்றுகலக்கப்பட்டு விட்டார்கள் என்று கார்ல் காவுத்ஸ்கியும் ஓட்டோ பௌவரும் கூறுகின்றனர். கலீஷியாவிலும் ருஷ்யாவிலும் உள்ள யூதர்கள் ஒரு தேசிய இனமாய் இருக்கவில்லை; துரதிருஷ்டவசமாய் இங்கு அவர்கள் இன்னமும் ஒரு சாதியாகவே இருந்து வருகிறார்கள் (இதற்குரிய குற்றம் புரிஷ்கேவிச்சுகளைச் சாருமே அன்றி அவர்களை அல்ல). யூதர்களது வரலாற்றைச் சந்தேகத்துக்கு இடமின்றி நன்கறிந்தவர்

களாகவும் மேலே கூறப்பட்ட உண்மைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வோராகவும் இருப்போர்; அளித்திடும் மறுக்க முடியாத தீர்ப்பாகும் இது.

இந்த உண்மைகள் நிரூபிப்பது என்ன? என்னவெனில், யூதப் பிற்போக்குவாத அற்பர்களால் தான் வரலாற்றுச் சக்கரத்தைப் பின்னேக்கி ஓட வைத்து, ருஷ்யாவிலும் கலீஷியாவிலும் இருக்கின்ற நிலைமைகளிலிருந்து பாரிஸிலும் நியூயார்க்கிலும் இருக்கின்ற நிலைமைகளுக்கு அல்ல, இதற்கு நேர் மாறுன திசையில் அதைச் செலுத்தி வைக்க விரும்புவோரால் மட்டும்தான் ''ஒன்றுகலத்தலுக்கு'' எதிராகக் கூச்சலிட முடியும்.

சிறந்த யூதர்களாய் இருப்போர்—உலக வரலாற்றுல் போற்றப்படுவோரும், ஜனநாயகத்தின், சோஷலிசத்தின் முதற்பெருந் தலைவர்களை உலகுக்குத் தந்துள்ளோருமான இவர்கள்—ஒன்றுகலத்தலை எதிர்த்து ஒருபோதும் கூச்சலிட்டதில்லை, யூதர்களது ''பின்னிலையை'' உயர் மதிப்புக்குரியதாகப் பார்த்துப் பரவசப்படுவோர்தான் ஒன்றுகலத்தலை எதிர்த்துக் கூச்சலிடுகிறுர்கள்.

தேசிய இனங்கள் ஒன்றுகலக்கும் பொதுவான நிகழ்ச்சிப் போக்கு முன்னேறிய முதலாளித்துவத்தின் இன்றைய நிலைமைகளில் அடைந்திருக்கும் வீச்சினை, உதாரணமாய் அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியேற்றப் புள்ளிவிவரங்களிலிருந்து ஓரளவு தெரிந்து கொள்ளலாம். 1891க்கும் 1900க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகளில், ஐரோப்பா 37,00,000 பேரை அங்கே அனுப்பிற்று; 1901லிருந்து 1909 வரையிலான ஒன்பது ஆண்டுகளில் 72,00,000 பேரை அனுப்பிற்று. 1900ஆம் ஆண்டு குடிக்கணக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1,00,00,000க்கு மேற்பட்ட அன்னியர்களைப் பதிவு செய்தது. இதே குடிக்கணக்கின் படி நியூயார்க் மாநிலத்தில் 78,000க்கு அதிகமான ஆஸ்திரியர்களும், 1,36,000 ஆங்கிலேயர்களும், 20,000 பிரெஞ்சுக்காரர்களும், 4,80,000 ஜெர்மானியர்களும், 37,000 ஹங்கேரியர்களும், 4,25,000 ஐரிஷ்காரர்களும், 1,82,000 இத்தாலியர்களும், 70,000 போலிஷ்காரர்களும், ருஷ்யாவிலிருந்து வந்த 1,66,000 பேரும் (பெரும்பாலும் யூதர்கள்), 43,000 ஸ்வீடிஷ்காரர்களும் பிறரும்

இருந்தார்கள். இவர்களிடையிலான தேசிய வேறுபாடுகளை இவ்வரசு அரைத்துப் பொடியாக்கி விடுகிறது. பிரமாதமான சர்வதேச அளவில் நியூயார்க்கில் நடந்தேறும் இதனை ஒவ்வொரு பெரிய நகரிலும் தொழில் துறைக் குடியேற்றத்திலும் நிகழக் காணலாம்.

தேசியவாதத் தப்பெண்ணங்களால் மூழ்கடிக்கப்படாதவர் எவரும், முதலாளித்துவமானது தேசிய இனங்களை ஒன்றுகலக்கச் செய்திடும் இந்த நிகழ்ச்சிப்போக்கு வரலாற்று வழிப்பட்ட மாபெரும் முன்னேற்றத்தைக் குறிப்பதாகும், பல்வேறு இருட்டு முடுக்குகளில், முக்கியமாய் ருஷ்யாவைப் போன்ற பிற்பட்ட நாடுகளில் தேசிய முரட்டுப் பிடிவாதம் தகர்க்கப்படுவதைச் சுட்டுவதாகும் என்பதைக் காணத் தவற முடியாது.

ருஷ்யாவையும், உக்ரேனியர்களிடம் மாருஷ்யர்களுக்கு உள்ள போக்கையும் எடுத்துக் கொள்ளுங்கள். கண்டும் கேட்டுமிராத அளவுக்கு உக்ரேனியர்கள் இழிவுக்கு உள்ளாக்கப்படுவதை இயற்கையாகவே ஒவ்வொரு ஜனநாயகவாதியும்—மார்க்சியவாதியைக் கூறவே வேண்டியதில்லை—கடுமையாய் எதிர்க்கவே செய்வார், உக்ரேனியர்களுக்கு முழு நிறை சமத்துவம் அளிக்கப்பட வேண்டுமெனக் கோரவே செய்வார். ஆனால் தனியொரு அரசின் வரம்புகளுக்குள் உக்ரேனியத் தொழிலாளர்களுக்கும் மாருஷ்யத் தொழிலாளர்களுக்கும் இடையே தற்போது இருந்து வரும் தொடர்புகளையும் கூட்டணியையும் பலவீனப்படுத்துவதானது, சோஷலிசத்துக்கு நேரடியாக துரோகம் இழைப்பதே ஆகும்; உக்ரேனியர்களது முதலாளித்துவ "தேசியக் குறிக்கோள்களின்" கண்ணோட்டத்திலிருந்துங்கூட ஓர் அசட்டுக் கொள்கையே ஆகும்.

திரு லேவ் யுர்க்கேவிச் தம்மை "மார்க்சியவாதியாக" அழைத்துக் கொள்கிறார் (பாவம் மார்க்ஸ்!)—மேற்கூறிய அசட்டுக் கொள்கைக்கு இவர் ஓர் உதாரணமாவார். உக்ரேனியப் பாட்டாளி வர்க்கம் முழு அளவுக்கு ருஷ்யமயமாக்கப்பட்டு விட்டது, அதற்கு தனியே ஒரு நிறுவனம் தேவையில்லை என்று 1906ல் சக்கலோவ்ஸ்கியும் (பசோக்) லுக்கஷேவிச்சும் (துச்சாப்ஸ்கி) அடித்துப் பேசியதாகத் திரு யுர்க்கேவிச் எழுதுகிறார். சாராம்சப் பிரச்சினை குறித்து

எந்த ஓர் உண்மையையும் எடுத்துரைக்காமலே திரு யுர்க் கேவிச், அவர்கள் இருவர் மீதும் பாய்கிருர், இது ''தேசியச் செயலின்மை'' ஆகுமென்றும், ''தேசியத் துறவு பூணல்'' ஆகுமென்றும், இவர்கள் ''உக்ரேனிய மார்க்சிய வாதிகளைப் பிளவுபடுத்தி விட்டார்கள்''!!! என்றும், இன்ன பலவாருகவும் மிகமிக இழிவான, அசட்டுத்தனமான, பிற் போக்கான தேசியவாதத்தின் மனப்பாங்கால் முழு அளவுக் குப் பீடிக்கப்பட்டவராய் ஆவேசக் கூச்சல் எழுப்புகிருர். இன்று ''தொழிலாளர்களிடையே உக்ரேனியத் தேசிய உணர்வு வளர்ந்திருப்பினும்'', சிறுபான்மையான தொழி லாளர்கள்தான் ''தேசிய உணர்வுடையோராய்'' இருக் கிருர்கள், பெரும்பான்மையோர் ''இன்னமும் ருஷ்யக் கலாசாரத்தின் செல்வாக்குக்கு உட்பட்டோராகவே'' இருக்கிருர்கள் என்று திரு யுர்க்கேவிச் வலியுறுத்துகிருர். நமது கடமை ''பெருந்திரளினரை நம் பின்னல் அணி திரளச் செய்வதும், அவர்களுக்குத் தேசிய நோக்கங்களை (தேசிய இலட்சியத்தை) விளக்கிக் கூறுவதுமே அன்றி, அவர்கள் பின்னல் செல்வதல்ல'' என்று இந்தத் தேசிய வாத அற்பர் கூவுகிருர் (திஸ்வின், பக்கம் 89).

திரு யுர்க்கேவிச்சின் இந்த வாதம் அனைத்தும் முத லாளித்துவ தேசியவாதமே ஆகும். ஆனல் முதலாளித்துவ தேசியவாதிகளது கண்ணோட்டத்திலிருந்து கூட—இவர் களில் சிலர் உக்ரேனியாவின் முழுநிறை சமத்துவத்துக் காகவும் தன்னுட்சிக்காகவும் நிற்பவர்கள், ஏனையோர் சுயேச்சை உக்ரேனியக் குடியரசுக்காக நிற்பவர்கள்— இந்த வாதம் ஏற்புடையதாகாது. விடுதலை பெறுவதற்காக உக்ரேனியர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை மாருஷ்ய, போலிஷ் நிலப்பிரபுத்துவ வர்க்கமும் இவ்விரு தேசங்களது முதலாளித்துவ வர்க்கமும் எதிர்க்கின்றன. இந்த வர்க் கங்களை எதிர்த்து நிற்கும் வல்லமை வாய்ந்த சமூக சக்தி எது? இருபதாம் நூற்றுண்டின் முதலாவது பத்தாண்டு மெய் நடப்பில் இக்கேள்விக்குப் பதிலளித்தது: ஜனநாயக விவசாயிகளைத் தன் பின்னல் அணி திரட்டிக் கொள்ளும் தொழிலாளி வர்க்கமே அன்றி வேறு எதுவுமல்ல இந்த சக்தி. மெய்யான ஜனநாயக சக்தியாக இருப்பதை எத னுடைய வெற்றி தேசிய ஒடுக்குமுறைக்கு இடம் இல்லாத

படிச் செய்யுமோ அந்த சக்தியைப் பிளவுபடுத்தவும், இவ் வழியில் அதைப் பலவீனப்படுத்தவும் முயலுவதன் மூலம் திரு யுர்க்கேவிச்பொதுவாக ஜனநாயகத்தின் நலன்களுக்கு மட்டுமல்லாமல், தமது தாய்நாடாகிய உக்ரேனியாவின் நலன்களுக்கும் துரோகம் இழைக்கிருர். மாருஷ்யப் பாட்டாளிகள், உக்ரேனியப் பாட்டாளிகள் இவர்களது ஒன்றுபட்ட செயல் இருக்குமாயின் சுதந்திர உக்ரேனியா சாத்தியமாகிவிடும்; இவர்களிடையே இந்த ஒற்றுமை இல்லையேல் அது சாத்தியமன்று.

ஆனல் மார்க்சியவாதிகள் தம்மை முதலாளித்துவ-தேசியவாதக் கண்ணேட்டத்துள் கட்டுப்படுத்திக் கொள்வோர் அல்லர். கடந்த சில பத்தாண்டுகளாய் அதிவேகப் பொருளாதார வளர்ச்சியானது திட்டவட்டமான போக்காகத் தெற்கிலே, அதாவது உக்ரேனியாவில் நடந்தேறி, மாருஷ்யாவிலிருந்து லட்சக் கணக்கான விவசாயிகளேயும் தொழிலாளர்களேயும் முதலாளித்துவ பண்ணேகளுக்கும் சுரங்கங்களுக்கும் நகரங்களுக்கும் கவர்ந்திழுத்து வந்திருக்கிறது. இந்த வரம்புகளுக்குள் மாருஷ்ய, உக்ரேனிய பாட்டாளிகளது ''ஒன்றுகலத்தல்'' சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மையாகும். இந்த உண்மை நிச்சயமாய் முற்போக்கானது. முதலாளித்துவமானது மாருஷ்ய அல்லது உக்ரேனிய நாட்டுப்புற முடுக்குகளின் அறியாமை இருளில் மூழ்கிய, முரட்டுப் பிடிவாதம் வாய்ந்த, அசைவற்று நிலேத்துவிட்ட குடியானவர்களின் இடத்தில், ஓயாமல் இடம் பெயரும் பாட்டாளிகளே உருவாக்குகிறது; இந்தப் பாட்டாளிகளின் வாழ்க்கை நிலேமைகள் மாருஷ்யாவுக்கும் அதே போல் உக்ரேனியாவுக்கும் உரிய பிரத்தியேக தேசியக் குறுகிய மனப்பாங்கைத் தகர்த்திடுகின்றன. மாருஷ்யாவுக்கும் உக்ரேனியாவுக்கும் இடையே ஒரு காலத்தில் அரசு எல்லே இருக்குமெனக் கொள்வோமாயினுங்கூட, மாருஷ்யத் தொழிலாளர்களும் உக்ரேனியத் தொழிலாளர்களும் இப்படி ''ஒன்றுகலத்தல்'' வரலாற்று வழியில் முற்போக்கானதாகும் என்பது, அமெரிக்காவில்' தேசிய இனங்கள் அரைத்துச் சேர்க்கப்படுதல் முற்போக்கானதாகும் என்பது எப்படியோ அது போலவே சந்தேகத்துக்கு இடமில்லாதது. உக்ரேனியாவும் மாருஷ்யாவும் எந்த

அளவுக்குச் சுதந்திரமடைகின்றனவோ, அந்த அளவுக்கு முதலாளித்துவத்தின் வளர்ச்சி அதிக விரிவும் வேகமும் அடைந்து மேலும் அதிக வலிமையுடன் அரசின் எல்லாப் பிராந்தியங்களிலிருந்தும் அண்டை அரசுகளிலிருந்தும் (ருஷ்யாவானது உக்ரேனியாவைப் பொறுத்த வரை அண்டை அரசாகி விடுமாயின்) தொழிலாளர்களையும் உழைப்பாளி மக்கள் திரளினரையும் நகரங்களுக்கும் சுரங்கங்களுக்கும் ஆலைகளுக்கும் கவர்ந்திழுக்கும்.

இரு தேசிய இனங்களது பாட்டாளி வர்க்கத்தின் ஒட்டுறவாலும் இணைப்பாலும் ஒன்றுகலத்தலாலும் கிடைக்கக் கூடிய ஆதாயங்களை உக்ரேனிய தேசிய இலட்சியத்தின் கண நேர வெற்றிக்காக வேண்டி திரு லேவ் யுர்க்கேவிச் விட்டொழிக்கையில், அவர் மெய்யான முதலாளித்துவ வர்க்கத்தவரைப் போல, அதுவும் கிட்டத்துப் பார்வையும் குறுகிய மனப்பாங்கும் கொண்ட அசட்டு ஆளைப் போல, அதாவது குட்டிமுதலாளித்துவ அற்பரைப் போல நடந்து கொள்கிறார். தேசிய இலட்சியமே முதலாவது இலட்சியம், பாட்டாளி வர்க்க இலட்சியம் பிற்பாடுதான் என்கிறார்கள் முதலாளித்துவ தேசியவாதிகள்; உடனே திருவாளர்கள் யுர்க்கேவிச்சுகளும் தொன்த்ஸோவ்களும் இன்ன பிற போலி மார்க்சியவாதிகளும் அவர்களைப் பின் தொடர்ந்து அவர்கள் கூறுவதை அப்படியே திருப்பிச் சொல்கிறார்கள். பாட்டாளி வர்க்க இலட்சியமே முதலாவது இலட்சியம் என்கிறோம் நாம்—ஏனெனில் இந்த இலட்சியம்தான் உழைப்பாளரது நீடித்த அடிப்படை நலன்களையும் மனித குலத்தின் நலன்களையும் மட்டுமின்றி, ஜனநாயகத்தின் நலன்களையும் பாதுகாக்கிறது; ஜனநாயகம் இல்லையேல் தன்னாட்சி உக்ரேனியாவும் சரி, சுயேச்சை உக்ரேனியாவும் சரி, நினைத்துக்கூட பார்க்க முடியாதவை.

இறுதியில், மதிப்பிடற்கரிய தேசியவாத மணிகள் நிறைந்ததான திரு யுர்க்கேவிச்சின் வாதத்தில் பின்வரும் மற்றொரு கூற்றினையும் குறிப்பிட்டாக வேண்டும். உக்ரேனியத் தொழிலாளர்களில் சிறுபான்மையினர் தேசிய உணர்வுடையோராய் இருக்கிறார்கள், ''பெரும்பான்மையோர் இன்னமும் ருஷ்யக் கலாசாரத்தின் செல்வாக்குக்கு

உட்பட்டுதான் இருக்கிறார்கள்'' என்கிறார் ("більшість перебуває ще під впливом російської культури").

பாட்டாளி வர்க்கம் குறித்துப் பேசுகையில் ஒட்டு மொத்தமாய் உக்ரேனியக் கலாசாரத்தை ஒட்டுமொத்த மாய் ருஷ்யக் கலாசாரத்துக்கு எதிராய் வைத்திடுவதானது, முதலாளித்துவ தேசியவாதத்தின் நலனை முன்னிட்டு வெட்கமின்றிப் பாட்டாளி வர்க்க நலன்களுக்குத் துரோக மிழைப்பதே ஆகும்.

தற்கால தேசம் ஒவ்வொன்றிலும் இரண்டு தேசங்கள் உள்ளன என்று தேசியவாத-சோஷலிஸ்டுகள் எல்லோ ரிடத்தும் நாம் கூறுகிறோம். ஒவ்வொரு தேசிய கலாசாரத் திலும் இரண்டு தேசிய கலாசாரங்கள் உள்ளன. புரிஷ் கேவிச்சுகள், குச்கோவ்கள், ஸ்துரூவேக்கள் ஆகியோரது மாருஷ்யக் கலாசாரம் ஒன்று இருக்கிறது. செர்னிஷேவ்ஸ்கி, பிளெஹானவ் பெயர்களால் குறிக்கப்படும் மாருஷ்ய கலா சாரம் ஒன்றும் இருக்கிறது. ஜெர்மனியிலும் பிரான்சிலும் இங்கிலாந்திலும் யூதர்களிடையிலும் ஏனையவற்றிலும் இருப்பது போலவே, உக்ரேனியாவிலும் இதே இரு கலா சாரங்கள் இருக்கின்றன. உக்ரேனியத் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் மாருஷ்யக் கலாசாரத்தின் செல் வாக்குக்கு உட்பட்டு இருக்கிறார்கள் என்றால், இதோடு கூட இன்னொன்றையும் நாம் நன்றாகவே அறிவோம்: மா ருஷ்யச் சமயக் குருமார்களுக்கும் முதலாளித்துவ வர்க்கத் தாருக்கும் உரிய கலாசாரத்துடன் கூடவே, மாருஷ்ய ஜன நாயகத்துக்கும் சமூக-ஜனநாயகத்துக்கும் உரிய கருத்துக் களும் செயல்படுவதை அறிவோம். முதல் வகைக் ''கலா சாரத்தை'' எதிர்த்துப் போராடுகின்ற உக்ரேனிய மார்க் சியவாதி, இரண்டாவது வகைக் கலாசாரத்தை எப்போ துமே வேறுபடுத்திக் காட்டித் தமது தொழிலாளர்களிடம் கூறுவார்: ''வர்க்க உணர்வு படைத்த மாருஷ்யத் தொழி லாளர்களோடும் அவர்களது இலக்கியத்தோடும் அவர் களது கருத்துக்களது முழு வீச்சோடும் ஒட்டும் உறவும் கொள்வதற்கு எல்லா வாய்ப்புகளையும் நாம் முழு மூச்சுடன் கைக்கொள்வதும் பயன்படுத்திக் கொள்வதும் வளர்த்துச் செல்வதும் நமது கடமையாகும்; உக்ரேனியத் தொழிலாளி வர்க்க இயக்கம், மாருஷ்யத் தொழிலாளி

வர்க்க இயக்கம் ஆகிய இரண்டின் நலன்களும் இதனை அவசியமாக்குகின்றன.''

உக்ரேனிய மார்க்சியவாதிக்கு மாருஷ்ய ஒடுக்குமுறையாளர்கள் மீதுள்ள வெறுப்பு முற்றிலும் நியாயமானது, இயற்கையானது. ஆனல் மாருஷ்யத் தொழிலாளர்களது பாட்டாளி வர்க்கக் கலாசாரத்துக்கும் பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்கும் அவர் இந்த வெறுப்பினை—இம்மியளவுக்குத்தான் என்ருலுங்கூட, மனத்தாங்கல் என்னும்படியான அளவுக்கு மட்டும்தான் என்ருலுங்கூட—எடுத்துச் செல்லும்படி, இவ்வெறுப்பால் அந்த அளவுக்குத் தாம் ஆட்கொள்ளப்படுவதற்கு அனுமதிப்பாராயின், பிறகு அந்த மார்க்சியவாதி முதலாளித்துவ தேசியவாதச் சகதிக்குள்தான் வழுக்கிச் சென்றுவிடுவார். இதே போலத்தான் மாருஷ்ய மார்க்சியவாதியானவர் உக்ரேனியர்களுக்கு முழுநிறை சமத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையோ, சுதந்திர அரசை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு இருக்கும் உரிமையையோ கணமும் மறப்பாராயினும், அவர் முதலாளித்துவ தேசியவாதச் சகதிக்குள் மட்டுமின்றி கறுப்பு நூற்றுவரது தேசியவாதச் சகதிக்குள்ளும் வழுக்கிச் சென்று விடுவார்.

மாருஷ்யத் தொழிலாளர்களும் உக்ரேனியத் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து செயல்பட வேண்டும்; ஒரே அரசில் அவர்கள் வாழ்ந்து வரும் வரையில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பொதுவான அல்லது சர்வதேசியக் கலாசாரத்தை நோக்கி மிக நெருங்கிய நிறுவன ஒற்றுமையும் இணைப்பும் கொண்டு பாடுபட வேண்டும், எந்த மொழியில் பிரசாரம் செய்வது என்கிற பிரச்சினையிலும் இந்தப் பிரசாரத்தின் முற்றிலும் பிராந்திய அல்லது தேசியத் தன்மையதான விவரங்களிலும் முழு அளவுக்குப் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். இது மார்க்சியத்தின் அத்தியாவசியக் கோரிக்கையாகும். ஒரு தேசிய இனத்தின் தொழிலாளர்கள் மற்ருென்றின் தொழிலாளர்களிடமிருந்து தனியே பிரிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுவதையும், மார்க்சிய ''ஒன்றுகலத்தல்'' மீதான எல்லாத் தாக்குதல்களையும், பாட்டாளி வர்க்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் ஒட்டு மொத்தமாய் ஒரு

தேசியக் கலாசாரத்தை ஒருமித்ததாய் இருப்பதாகப் பாவிக்கப்படும் இன்னொரு தேசிய கலாசாரத்துக்கு எதிராய் வைப்பதற்கான எந்த முயற்சிகளையும், இன்ன பிறவற்றையும் எவ்விதத்திலும் ஆதரித்து நிற்பதானது, முதலாளித்துவ தேசியவாதமே ஆகும்—இந்த முதலாளித்துவ தேசியவாதத்தை எதிர்த்து ஈவிரக்கமற்ற போராட்டம் நடத்துவது அத்தியாவசியக் கடமையாகும்.

## 4. "கலாசார-தேசியத் தன்னாட்சி"

''தேசியக் கலாசாரம்'' என்ற கோஷத்தைப் பற்றிய பிரச்சினை மார்க்சியவாதிகளுக்கு அளவுகடந்த முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருப்பதற்குக் காரணம், தேசிய இனப் பிரச்சினையில் முதலாளித்துவப் பிரசாரத்துக்கு மாறாய் நாம் நடத்தும் பிரசாரம், கிளர்ச்சி ஆகிய அனைத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தையும் நிர்ணயிப்பதாய் இது இருக்கிறது என்பது மட்டுமல்ல; வெகுவாய் விவாதிக்கப்படும் கலாசார - தேசியத் தன்னாட்சி வேலைத்திட்டம் அனைத்துக்கும் இந்தக் கோஷம்தான் அடிப்படை என்பதும் காரணமாகும்.

இந்த வேலைத்திட்டம் புரிந்திடும் அடிப்படையான, தலையாய கேடு என்னவெனில், மிகமிக நயமான, பரிபூரண மான, கடைக்கோடியான தேசியவாதத்தை வாழ்க்கையில் செயல்படுத்துவதற்காக அது முயலுகிறது என்பது தான். இந்த வேலைத்திட்டத்தின் சாரம் வருமாறு: ஒவ்வொரு குடிமகனும் தன்னை இந்த அல்லது அந்தத் தேசிய இனத்தைச் சேர்ந்தவராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும், ஒவ்வொரு தேசிய இனமும் தனது உறுப்பினர்களுக்குக் கட்டாய வரி விதிக்கும் உரிமை பெற்று, தேசிய நாடாளுமன்றங்களும் (சேய்ம்கள்) தேசிய ''அரசுச் செயலாளர்களும்'' (அமைச்சர்கள்) உடைய சட்ட இயல் அமைப்பு ஆகி விடுகிறது.

தேசிய இனப் பிரச்சினை குறித்துக் கையாளப்படும் இந்த மாதிரியான கருத்து, முதலாளித்துவம் குறித்துக் கையாளப்படும் புருதோன் கருத்துக்கு ஒப்பானதாகும்.

முதலாளித்துவத்தையும் அதன் அடிப்படையான பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியையும் ஒழித்திடுவதல்ல, அதற்குப் பதில் அந்த அடிப்படையிடமிருந்து முறைகேடுகளையும் தகாதவற்றையும் இன்ன பிறவற்றையும் களைந்திடல்; பரிவர்த்தனையையும் பரிவர்த்தனை மதிப்பையும் ஒழித்திடுவதல்ல, அதற்கு மாருக அதை ''அரசியல் சட்ட வழிப்பட்டதாய்'', சர்வப்பொதுவானதாய், பரிபூரணமானதாய், ''நியாயமானதாய்'', அலைவுகளும் நெருக்கடிகளும் முறைகேடுகளும் இல்லாததாய் ஆக்குதல்—இதுதான் புருதோனது கருத்து.

புருதோன் எப்படி குட்டிமுதலாளித்துவப் பிரிவினராய் இருந்தாரோ, அவரது தத்துவம் எப்படிப் பரிவர்த்தனையையும் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியையும் பரிபூரண இனவகையாக்கி அவற்றைக் குறையற்ற நிறைவாக உயர்த்தி வைக்கிறதோ, அதே போல ''கலாசார-தேசியத் தன்னுட்சி'' என்னும் தத்துவமும் வேலைத்திட்டமும் குட்டிமுதலாளித்துவத் தன்மையனவாய் இருக்கின்றன. ஏனெனில் இவை முதலாளித்துவ தேசியவாதத்தைப் பரிபூரண இனவகையாக்கி, அதைக் குறையற்ற நிறைவாக உயர்த்தி வைக்கின்றன, வன்முறையையும் அநியாயத்தையும் இன்ன பிறவற்றையும் அதனிடமிருந்து களைந்துவிடலாமென நினைக்கின்றன.

தேசியவாதம் எவ்வளவுதான் ''நியாயமான'', ''பரிசுத்தமான'', நயமான நாகரிக வகைப்பட்டதாய் இருப்பினும், அதனுடன் மார்க்சியவாதத்தை இணக்கமுடையதாக்க முடியாது. எல்லா வகையான தேசியவாதத்துக்கும் பதிலாய், மார்க்சியம் சர்வதேசியத்தை முன்வைக்கிறது; எல்லாத் தேசிய இனங்களும் உயர்நிலை ஒற்றுமையில் ஒன்றிணைவதை முன்வைக்கிறது—இந்த ஒற்றுமை ஒவ்வொரு மைல் ரயில்பாதை போடப்படுவதையும் தொடர்ந்து, ஒவ்வொரு சர்வதேச டிரஸ்டும் உருவாவதைத் தொடர்ந்து, ஒவ்வொரு தொழிலாளர் சங்கம் நிறுவப்படுவதையும் தொடர்ந்து (தொழிலாளர் சங்கமானது அதன் பொருளாதாரச் செயல்களிலும் மற்றும் அதன் கருத்துக்களிலும் நோக்கங்களிலும் சர்வதேசியத் தன்மை வாய்ந்தது), நம் கண்ணெதிரே வளர்ந்து வருகிறது.

தேசிய இனம் என்கிற கோட்பாடு முதலாளித்துவ சமுதாயத்தில் வரலாற்று வழியில் தவிர்க்க முடியாதது. இந்தச் சமுதாயத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மார்க்சியமானது, தேசிய இயக்கங்கள் வரலாற்று வழியில் நியாயமுடையவை என்பதை முழு அளவுக்கு அங்கீகரிக்கிறது. ஆனல் இந்த அங்கீகாரம் தேசியவாதத்துக்கான ஆதரவு விளக்கமாக ஆகி விடாதிருக்கும் பொருட்டு, இந்த இயக்கங்களில் முற்போக்கான அம்சமாய் இருப்பதற்கு மட்டுமானதாய் இந்த அங்கீகாரம் கண்டிப்பான முறையில் கட்டுப்படுத்தப்பட வேண்டும்—அப்போது தான் பாட்டாளி வர்க்க உணர்வு முதலாளித்துவ சித்தாந்தத்தால் மழுக்கடிக்கப்படுவதற்கு இந்த அங்கீகாரம் இட்டுச் செல்லாதிருக்கும்.

பிரபுத்துவ உறக்க நிலையிலிருந்து மக்கள் பெருந் திரளினர் துயிலெழுதலும், எல்லா விதமான தேசிய ஒடுக்குமுறையையும் எதிர்த்து, மக்களது அரசுரிமைக்காக, தேச அரசுரிமைக்காக அவர்கள் போராடுவதும் முற்போக்கானவை ஆகும். எனவே தேசிய இனப் பிரச்சினையின் எல்லாக்கூறுகளிலும் மிகவும் வைராக்கியமான, கிஞ்சித்தும் முரணற்ற ஜனநாயகத்துக்காகப் பாடுபடுவது மார்க்சியவாதியின் கட்டாயமான கடமையாகும். இந்தப் பணி பிரதானமாய் எதிர்மறையானது. ஆனல் தேசியவாதத்துக்கு ஆதரவளிப்பதில் பாட்டாளி வர்க்கம் இதற்கு மேல் செல்வது சாத்தியமன்று; ஏனெனில் இதற்கு மேல் தேசியவாதத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் ''நேர்முகச்'' செயற்பாடு, தேசியவாதத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சி ஆரம்பமாகி விடுகிறது.

பிரபுத்துவ ஆதிக்கம் அனைத்தையும், தேசிய ஒடுக்குமுறை அனைத்தையும், எந்த ஒரு தேசிய இனத்துக்கோ எந்த ஒரு மொழிக்கோ உள்ள எல்லாத் தனியுரிமைகளையும் ஒழித்துக் கட்டுதல்—இது, ஜனநாயக சக்தி என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்துக்கு உள்ள கட்டாயமான கடமையாகும், இது பாட்டாளிகளது வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு நிச்சயமாய் உகந்ததாகும்—தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமான பூசல்கள் வர்க்கப் போராட்டத்தை மழுக்கடிப்பவை, தடுத்து மட்டுப்படுத்துகிறவை.

ஆனால் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு ஆதரவளிப் பதில் கண்டிப்பான இந்த வரம்புகளுக்கு—வரலாற்று வழி யில் அமைந்த இந்தத் திட்டவட்டமான எல்லைகளுக்கு—**அப்பால்** செல்வது, பாட்டாளி வர்க்கத்துக்குத் துரோகம் புரிந்து முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் சேர்ந்து கொள் வதாகி விடும். இங்கு எல்லை வரம்பு இருக்கிறது, பல சந்தர்ப்பங்களிலும் இது மிக மெல்லியதாய் இருக்கக் கூடியது—**புந்து**, உக்ரேனியத் தேசியவாத-சோஷலிஸ்டு கள் இதனை அறவே மறந்து விடுகிறார்கள்.

எந்த விதமான தேசிய ஒடுக்குமுறையையும் எதிர்த் துப் போராடுதல்—இது அவசியம் செய்யப்பட வேண்டிய காரியம். எந்த விதமான தேசிய வளர்ச்சிக்காகவும், பொது வாகத் தேசியக் கலாசாரத்துக்காகவும் போராடுதல்—இதை ஒருபோதும் செய்யலாகாது. முதலாளித்துவ சமு தாயத்தின் பொருளாதார வளர்ச்சியானது உலகெங்கும் நமக்கு முதிர்ச்சியடையாத தேசிய இயக்கங்களுக்கு உதாரணங்களையும், பல சிறிய தேசிய இனங்களிலிருந்து பெரிய தேசிய இனங்கள் உருவாவதற்கு, அல்லது சிறியன வற்றில் சிலவற்றுக்குப் பாதகமாய் இவை உருவாவதற்கு உதாரணங்களையும், மற்றும் தேசிய இனங்கள் ஒன்றுகலத் தலுக்கு உதாரணங்களையும் அளித்திடுகிறது. பொதுப்பட தேசிய இனத்தின் வளர்ச்சி—இது முதலாளித்துவ தேசிய வாதத்தின் கோட்பாடாகும். எனவேதான் முதலாளித்துவ தேசியவாதம் வேறு எதையும் அணுக விடாமல் விலக்கி வைக்கும் தன்மை வாய்ந்ததாய் இருக்கிறது; எனவே தான் தேசியப் பூசல்கள் ஓயாமல் நடைபெறுகின்றன. ஆனால் பாட்டாளி வர்க்கம் ஒவ்வொரு தேசிய இனத்தின் தேசிய வளர்ச்சிக்கும் ஆதரவாக நிற்கத் தயாராய் இல்லை என்பது மட்டுமல்ல; இதற்கு மாறாய் இம்மாதிரியான பிரமைகளுக்கு எதிராய் மக்கள் பெருந்திரளினரை எச்சரிக் கிறது; முதலாளித்துவ ஒட்டுறவுக்கு முழு அளவு சுதந்திரம் வேண்டுமென்பதை ஆதரிக்கிறது; வன்முறை அல்லது தனியுரிமையின் அடிப்படையில் அமைந்ததைத் தவிர்த்து, தேசிய இனங்களது ஏனைய எல்லா விதமான ஒன்றுகலத் தலையும் வரவேற்கிறது.

''நியாயமான முறையில்'' வரம்பிடப்பட்ட குறிப்

பிட்ட அரங்குக்குள் தேசியவாதத்தை உறுதி பெறச் செய்தல், தேசியவாதத்தை ''அரசியல் சட்ட வழிப்பட்டதாய்'' ஆக்குதல், எல்லாத் தேசிய இனங்களும் ஒன்றிலிருந்து ஒன்று விலகிப் பிரிந்திருத்தலை விசேஷ அரசு நிறுவனத்தின் மூலம் உறுதியாக்கி கெட்டி பெறச் செய்தல் ஆகிய இவைதான் கலாசார-தேசியத் தன்னாட்சியின் சித்தாந்த அடிப்படையும் உள்ளடக்கமும் ஆகும். இந்தக் கருத்து முழுக்க முழுக்க முதலாளித்துவத் தன்மை வாய்ந்தது, முழுக்க முழுக்கத் தவறானது. எவ்விதத்திலும் தேசியவாதம் நிலைநாட்டப்படுதலைப் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க முடியாது, இதற்கு மாறாக தேசிய வேறுபாடுகளைக் குறையச் செய்து தேசியப் பிரிவினைச் சுவர்களை அகற்ற உதவுகிறவை யாவற்றையும், தேசிய இனங்களுக்கு இடையிலான பந்தங்களை மேலும் மேலும் நெருக்கம் பெறச் செய்கிறவை அல்லது தேசிய இனங்களை மேலும் மேலும் இணைய வைப்பவை யாவற்றையும் அது ஆதரிக்கிறது. இவ்வாறின்றி வேறு விதமாய்ச் செயல்படுதல், பிற்போக்கான தேசியவாதக் குட்டிமுதலாளித்துவ அற்பர்களின் பக்கம் சென்று விடுவதையே குறிக்கும்.

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் புரூன் நகரில் கூடிய அவர்களது காங்கிரசில் (1899), கலாசார-தேசியத் தன்னாட்சித் திட்டம் குறித்து விவாதித்தபோது, அந்தத் திட்டம் குறித்துத் தத்துவார்த்த மதிப்பீடு செய்வதில் அனேகமாய் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. ஆயினும் அந்தத் திட்டத்துக்கு எதிராய்ப் பின்வரும் இரு வாதங்கள் முன்வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்: 1) சமயக் குருமார்களது அதிகாரம் வலுவடைவதற்கே அது வழி கோலும்; 2) ''தேசியவெறியை நீடித்து நிலைக்கச் செய்வதும், ஒவ்வொரு சிறு சமூகத்திலும் ஒவ்வொரு சிறு கோஷ்டியிலும் தேசியவெறியைப் புகுத்திடுவதும் தான் அதன் விளைவாய் இருக்கும்'' (புரூன் காங்கிரசின் அதிகார பூர்வமான குறிப்பேடுகள், ஜெர்மன் மொழியில், பக்கம் 92. ருஷ்ய மொழிபெயர்ப்பு யூதத் தேசியவாதக் கட்சியான ''சேர்ப்''பால்[11] வெளியிடப்பட்டுள்ளது).

''தேசியக் கலாசாரம்'' என்பது—அந்தப் பதத்தின்

வழக்கமான அர்த்தத்தில், அதாவது பள்ளிகளும் இன்ன பிறவும்—தற்போது உலகின் எல்லா நாடுகளிலும் சமயக் குருமார்கள், முதலாளித்துவ தேசியவெறியர்கள் ஆகியோரது ஆதிக்க வலிமை வாய்ந்த செல்வாக்குக்கு உட்பட்டிருக்கிறது. புந்துக்காரர்கள் ''கலாசார-தேசியத்'' தன்னாட்சியை ஆதரித்து வாதாடுகையில், தேசிய இனங்கள் நிறுவப்படுவதானது அவற்றுள் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை அதற்குப் புறம்பான தாக்கங்கள் எவற்றாலும் களங்கமுறாமல் தூய்மையாய் இருக்கச் செய்யும் என்று கூறுகிறார்கள்—தெளிவாகவே இது நகைக்கத் தக்க குதர்க்கவாதமே ஆகும். எந்த முதலாளித்துவ சமுதாயத்திலும் பிரதானமாய்ப் பொருளாதார, அரசியல் துறையில்தான் முனைப்பான வர்க்கப் போராட்டம் நடைபெறுகின்றது. இதனிடமிருந்து பள்ளிகளின் துறையைப் பிரித்து வைப்பதானது, முதலாவதாக அபத்தமான அளவுக்குக் கற்பனாவாதமாகும், ஏனெனில் பள்ளிகள் (பொதுவாகத் ''தேசியக் கலாசாரம்'' எப்படியோ அதே போல) பொருளாதாரத்திலிருந்தும் அரசியலிலிருந்தும் பிரிக்கப்பட முடியாதவை. இரண்டாவதாக, முதலாளித்துவ நாட்டில் பொருளாதார, அரசியல் வாழ்க்கைதான் அசட்டுத்தனமான, காலங் கடந்து விட்டவையான தேசியத் தடைமதில்களையும் தப்பெண்ணங்களையும் தகர்த்து நொறுக்கப்படுவதை ஒவ்வொரு தப்படியிலும் அவசியமாக்குகிறது; ஆனால் பள்ளிகளையும் இவை ஒத்த பிறவற்றையும் பிரித்து வேறுபடுத்துவதானது ''தூயச்'' சமயக் குருமார்களது அதிகாரத்தையும் ''தூய'' முதலாளித்துவ தேசிய வெறியையும் நீடித்து நிலைக்கவும் கடுமையாக்கவும் பலப்படுத்தவும்தான் செய்யும்.

பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த முதலாளிகளும் கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் உட்கார்ந்து முழு அளவுக்கு ஒன்றுகலக்கின்றனர். பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஆலைகளில் ஒன்று சேர்ந்து வேலை செய்கிறார்கள். மெய்யாகவே முனைப்புக்குரிய ஆழ்ந்த அரசியல் பிரச்சினைகள் யாவற்றிலும் வர்க்கங்களின் அடிப்படையில் தரப்புகள் உருவாகின்றனவே அன்றி, தேசிய இனங்களின் அடிப்படையில் அல்ல. பள்ளி

களையும் இன்ன பிறவற்றையும் பற்றிய விவகாரங்களை ''அரசு அதிகாரத்தின் வரம்புகளிலிருந்து விலக்கி'', தேசிய இனங்களது கைக்கு மாற்றிடுவதானது, தேசிய இனங்களை இணைத்திடும் பொருளாதாரத்திலிருந்து சமுதாய வாழ்வில் யாவற்றையும்விட அதிக அளவுக்குச் சித்தாந்தத் துறை என்பதாகச் சொல்லத்தக்கதை, ''தூய'' தேசியக் கலாசாரம்—அல்லது சமயக் குருமார்களது அதிகாரத்தின், தேசியவெறியின் தேசியப் பயிர்—வேறு எங்கேயும்விட எளிதாய் வளரும் துறையை **பிரித்து விலக்குவதற்கான** முயற்சியையே குறிப்பதாகும்.

''நிலவரைக்கு உட்படாத'' (வாழும் நிலப்பரப்புக்கு உட்படாத, இந்த அல்லது அந்த தேசிய இனம் வாழுகிற நிலப்பரப்புடன் சம்பந்தப்படாத) அல்லது ''கலாசார-தேசியத்'' தன்னாட்சித் திட்டம் என்பதன் நிறைவேற்றம் நடைமுறையில் குறிப்பது ஒன்றே ஒன்றுதான்: **பள்ளிக்கூட விவகாரங்கள் தேசிய இன வாரியாகப் பிரிக்கப்படுதல் தான்,** அதாவது பள்ளிக்கூட விவகாரங்களில் தேசிய இன ஆட்சி மன்றங்கள் புகுத்தப்படுதல்தான். பிரபலமான **புந்துத்** திட்டத்தின் மெய்யான உட்பொருள் குறித்துப் போதிய அளவு சிந்தனை செலுத்தினால்,சோஷலிசத்துக்காக நடைபெறும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் கண்ணோட்டத்திலிருந்து வேண்டாம், ஜனநாயகத்தின் கண்ணோட்டத்திலிருந்துகூட இத்திட்டம் எப்படி முழுக்க முழுக்கப் பிற்போக்கானது என்பதைப் புரிந்து கொண்டு விடலாம்.

பள்ளிக்கூடங்களைத் தேசிய இன மயமாக்குதலுக்கு ஒரேயொரு உதாரணத்தையும் ஒரேயொரு திட்டத்தையும் கொடுத்தோமானால், சாரப் பொருள் கண்கூடாகி விடும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் வட அரசுகள், தென் அரசுகள் என்பதான பிரிவினை, வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இது நாள் வரை நடப்பில் இருந்து வரும் ஒன்றாகும். வட அரசுகள் சுதந்திர மரபுகளையும் அடிமை உடைமையாளர்களுக்கு எதிரான போராட்ட மரபுகளையும் அதிகம் பெற்றுள்ளவை. தென் அரசுகள் அடிமையுடைமை மரபுகளையும் நீக்ரோவரை வேட்டையாடுதலின் மீதமிச்சங்களையும் அதிகம் பெற்றுள்ளவை—இங்கே நீக்

ரோக்கள் பொருளாதார ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப் பட்டுக் கலாசாரத்தில் பிற்பட்ட நிலையில் உள்ளனர் (எழுத் தறியாதோரின் சதவீதம் நீக்ரோவரிடம் 44, வெள்ளை யரிடம் 6), இப்படி இன்னும் பலவற்றையும் குறிப்பிட லாம். வட அரசுகளில் நீக்ரோக் குழந்தைகள் வெள்ளையர் குழந்தைகள் செல்லும் அதே பள்ளிக்கூடங்களுக்குச் செல் கிறார்கள். தென் அரசுகளில் நீக்ரோக் குழந்தைகளுக்குத் தனியே ''தேசிய இன'' அல்லது வர்ண இன—எப்படியும் கொள்ளலாம்—பள்ளிக்கூடங்கள் உள்ளன. பள்ளிக்கூட விவகாரங்கள் ''தேசிய இன மயம்'' ஆக்கப்படுதலுக்கு இதுதான் ஒரேயொரு உதாரணம் என்பதாகத் தெரிகிறது.

பேய்லிஸ் விவகாரத்தைப்[12] போன்ற பலவும் இது நாள் வரை சாத்தியமாய் இருந்து வரும் நாடு ஒன்று கிழக்கு ஐரோப்பாவில் உள்ளது—இங்கே யூதர்கள் நீக் ரோவரைக் காட்டிலும் மோசமான நிலையில் புரிஷ்கேவிச் சுகளால் இருத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள், யூதர்களது பள்ளிக்கூடங்களைத் தேசிய இன மயமாக்கிடும் திட்டம் ஒன்று இந்நாட்டில் அண்மையில் அமைச்சரகத்தால் கருதப் பட்டு வந்தது. நல்ல வேளையாக இந்தப் பிற்போக்கு வாதக் கற்பனுவாதம், ஆஸ்திரியக் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரின் கற்பனுவாதத்தைப் போல் அதே அளவுக் குத்தான் நடைமுறை சாத்தியமாகலாம். ஆஸ்திரியக் குட்டிமுதலாளித்துவப் பகுதியோர் முரணற்ற ஜன நாயகத்தைச் சித்தி பெறச் செய்யவோ, தேசியப் பூசல் களுக்கு முடிவு கட்டவோ முடியும் என்பதில் நம்பிக்கை இழந்தோராகி, பள்ளிக்கூடங்களைப் பகிர்ந்து கொள்வதில் தேசிய இனங்கள் சண்டைக்கு நிற்காதவாறு செய்யும் பொருட்டு, பள்ளிக்கூட விவகாரங்களில் அவற்றுக்குத் தனியடைப்புகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்... ஆனால் ஒரு ''தேசியக் கலாசாரம்'' இன்னென்றுக்கு எதிராய் நிரந்தரமாய்ச் சண்டைக்கு நிற்பதற்காகத் தம்மை''வகுத் தமைத்துக்'' கொண்டுள்ளனர்.

ஆஸ்திரியாவில் கலாசார-தேசியத் தன்னாட்சிக் கருத் தானது பெருமளவுக்கு இலக்கியக் கற்பனையாகவே இருந் துள்ளது. ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள்கூட இதனைக் கருத்துக்குரியதாகக் கொள்ளவில்லை. ஆனால் ருஷ்யாவில்

இது யூத முதலாளித்துவக் கட்சிகள் யாவற்றின் வேலைத்திட்டங்களிலும், மற்றும் பற்பல தேச இனங்களையும் சேர்ந்த சில குட்டிமுதலாளித்துவ, சந்தர்ப்பவாதக் கூறுகளது வேலைத்திட்டங்களிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது—உதாரணமாய் புந்துக்காரர்களையும் காக்கசஸில் உள்ள கட்சிக் கலைப்புவாதிகளையும்[13] இடதுசாரி நரோத்னிக்குப் போக்குடைய ருஷ்யத் தேசியக் கட்சிகளது மாநாட்டையும் சொல்லலாம். (இந்த மாநாடு—இடைக்குறிப்பாய் இதனை எடுத்துரைக்கிறோம்—1907ல் நடைபெற்றது; ருஷ்ய சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்[14], போலிஷ் சமூக-தேச பக்தர்கள், பி. எஸ். பி. ஆகியோர் வாக்களிக்காமல் விலகியிருக்க இம்மாநாட்டின் தீர்மானம் ஏற்கப்பட்டது. தேசிய வேலைத்திட்டத்தின் துறையில் கோட்பாடு குறித்த முக்கிய பிரச்சினையில் தமது போக்கினைத் தெரிவிப்பதற்காக சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் பி.எஸ்.பியினரும்[15] வாக்களிக்காமல் விலகியிருப்பதானது, வியக்கத்தக்க அவர்களது தனிப்பண்புக்குரிய ஒரு முறையாகும்!)

ஆஸ்திரியாவில் "கலாசார-தேசியத் தன்னாட்சியின்" தலைமைத் தத்துவக் கர்த்தாவாகிய ஒட்டோ பௌவர் இந்த வேலைத்திட்டம் யூதர்களுக்குச் சாத்தியமானதல்ல என்று நிரூபிப்பதற்காகத் தமது புத்தகத்தில் ஒரு தனி அத்தியாயத்தை ஒதுக்கினார். ஆனால் ருஷ்யாவில் யூதர்களிடையேதான் எல்லா முதலாளித்துவக் கட்சிகளாலும்—அவற்றின் எதிரொலியாகிய புந்தாலும்—இந்த வேலைத் திட்டம் ஏற்கப்பட்டிருக்கிறது.* இது காட்டுவது என்ன?

---

* யூத முதலாளித்துவக் கட்சிகள் யாவும் "கலாசார-தேசியத் தன்னாட்சியை" ஏற்றுக் கொண்டு விட்டன என்ற உண்மையை புந்துக்காரர்கள் ஆவேசமாய் அடிக்கடி மறுக்கிறார்கள், இது புரிந்து கொள்ளக் கூடியதே. உண்மையில் புந்து ஆற்றி வரும் பாத்திரத்தை இது அப்பட்டமாய் அம்பலப்படுத்துகிறது. புந்துக்காரரான திரு மானின் லூச்சில்[16] தமது மறுப்பைத் திரும்பவும் சொல்ல முயன்ற போது, என். ஸ்கோப் அவரை பூரணமாய் அம்பலப் படுத்தினார் (ஆதாரம்: பிரோஸ்வெஷேனியெ,[17] இதழ் 3). ஆனால் என்.ஸ்கோப் "எல்லா யூத முதலாளித்துவக் கட்சிகளோடும் கோஷ்டிகளோடும் சேர்ந்து புந்துக்காரர்கள் நீண்டகாலமாய் கலாசார-தேசியத் தன்னாட்சியை

பௌவரின் கண்டு பிடிப்பு எவ்வளவு அபத்தமானது என்பது பிறிதொரு அரசின் அரசியல் நடைமுறை மூலம் வரலாறுனது அம்பலப்படுத்தியுள்ளதைத்தான் இது காட்டுகிறது — ருஷ்ய பெர்ன்ஷ்டைனியர்கள்[18] (ஸ்துரூவே, துகான்-பரஞேவ்ஸ்கி, பெர்தியாயெவ், மற்றும் இவர்களது கூட்டாளிகள்) மார்க்சியத்திலிருந்து மிதவாதத்துக்கு அவர்கள் அதிவேகமாய்ப் பரிணும மாற்றமடைந்ததன் மூலம் ஜெர்மன் பெர்ன்ஷ்டைனியத்தின் மெய்யான சித்தாந்த உள்ளடக்கத்தை எப்படி அம்பலப் படுத்திக் காட்டினுர்களோ, அதே போல ஆகும்.

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளும் சரி, ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதிகளும் சரி ''கலாசார-தேசியத்'' தன்னுட்சியைத் தமது வேலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆனுல் மிகவும் பிற்பட்ட ஒரு நாட்டில் யூத முதலாளித்துவ கட்சிகளும், சோஷலிஸ்டு என்பதாகக் கூறிக் கொள்ளும் பல குட்டிமுதலாளித்துவ கோஷ்டிகளும், தொழிலாளி வர்க்கத்திடம் முதலாளித்துவ தேசியவாதக் கருத்துக்களை நயமான வடிவில் பரப்பும் பொருட்டு இதனை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த உண்மை தன்னைத் தானே தெளிவாகவே விளக்கிக் கொள்கிறது.

---

ஆதரித்து வந்துள்ளனர்'' என்று கூறுவதை பிரோஸ் வெஷேனியெவிலிருந்து (இதழ் 3, பக்கம் 78) திரு லேவ் யுர்க்கேவிச் மேற்கோளாய் திஸ்வினில் (1913, இதழ்கள் 7—8, பக்கம் 92) எடுத்துத்துரைக்கும் போது, புந்துக்காரர்கள் என்னும் சொல்லை விட்டுவிட்டு, ''கலாசார-தேசியத் தன்னுட்சி'' என்னும் சொற்களை ''தேசிய உரிமைகள்'' என்கிற சொற்களாக மாற்றிக் கூறி இந்த வாக்கியத்தைத் திரித்துப் புரட்டுவதைப் பார்க்கையில், கைகளை உயர்த்தி வியப்புறுவதைத் தவிர ஒன்றும் செய்வதற்கில்லை! திரு லேவ் யுர்க்கேவிச் ஒரு தேசியவாதி மட்டுமல்ல, சமூக-ஜனநாயகவாதிகளது வரலாற்றையும் அவர்களது வேலைத்திட்டத்தையும் பற்றிய விவகாரங்களில் வியக்கத்தக்க அறிவிலி மட்டுமல்ல, புந்து ஆதாயமடைய வேண்டுமென்று மேற்கோள்களை நேரடியாகவே பொய்யாகத் திரித்துக் கூறுகிறவரும் ஆவார். புந்தின் விவகாரங்களும் யுர்க்கேவிச்சுகளின் விவகாரங்களும் படுமோசமான நிலையில்தான் இருக்க வேண்டும்!

தேசிய இனப் பிரச்சினை பற்றிய ஆஸ்திரிய வேலைத் திட்டத்தை நாம் குறிப்பிட்டதால், புந்துக்காரர்களால் அடிக்கடி திரித்துப் புரட்டப்படும் ஓர் உண்மையை நாம் திரும்பவும் வலியுறுத்திக் கூறியாக வேண்டும். புரூன் காங்கிரசில் ''கலாசார-தேசியத் தன்னாட்சிக்கான'' தூய வேலைத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது. இது தெற்கு ஸ்லாவிய சமூக-ஜனநாயகவாதிகளது வேலைத்திட்டம். இதன் §2 கூறுவதாவது: ''ஆஸ்திரியாவில் வாழுகிற ஒவ்வொரு தேசிய இனமும், அதன் உறுப்பினர்கள் வசிக்கும் நிலப் பரப்பைக் கருதாமலே, ஒரு தன்னாட்சிக் குழுமமாய் அமைந்து தனது தேசிய (மொழி, கலாசார) விவகாரங்கள் யாவற்றையும் முற்றிலும் சுயேச்சையாய் நிர்வகித்துக் கொள்கிறது.'' கிரிஸ்தானல் மட்டுமின்றி, செல்வாக்கு வாய்ந்த எல்லென்போகெனலும் இந்த வேலைத்திட்டம் ஆதரிக்கப்பட்டது. ஆனல் இது வாபஸ் வாங்கப்பட்டது, ஒரு வாக்குகூட இதற்காக அளிக்கப்படவில்லை. நிலவரைக்கு உட்பட்ட வேலைத்திட்டம் ஒன்று, அதாவது ''தேசிய இனத்தின் உறுப்பினர்கள் வசிக்கும் நிலப்பரப்பைக் கருதாமலே'' தேசியக் குழுமங்கள் எவற்றையும் தோற்றுவிக்காத ஒன்று, ஏற்கப்பட்டது.

ஏற்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் பிரிவு 3 கூறுவதாவது: ''ஒரே தேசிய இனத்தின் சுய-நிர்வாகப் பிராந்தியங்கள் ஒரு தேசிய இன ஐக்கிய கூட்டிணைவை எல்லாமாகச் சேர்ந்து அமைத்திடுகின்றன. இந்தக் கூட்டிணைவு தனது தேசிய இன விவகாரங்களை முழு அளவுக்குத் தன்னாட்சி அடிப்படையில் நிர்வகிக்கும்.'' (ஆதாரம்-பிரோஸ் வெஷேனியெ, 1913, இதழ் 4, பக்கம் 28).[19] தெளிவாகவே இந்தச் சமரச வேலைத்திட்டமும் தவறானதுதான். ஓர் உதாரணம் இதனை எடுத்துக்காட்டும். சராத்தவ் மாநிலத்திலுள்ள ஜெர்மன் குடியேற்றச் சமூகமும், ரீகா அல்லது லோட்ஸின் ஜெர்மன் தொழிலாளர் சுற்றுப்புறமும், பீட்டர்ஸ்பர்க்குக்கு அருகிலுள்ள ஜெர்மன் குடியிருப்பும், இன்ன பிறவும் ருஷ்யாவிலுள்ள ஜெர்மானியர்களது ''ஒரு தேசிய இன ஐக்கியக் கூட்டிணைவாய்'' அமையலாம். சமூக-ஜனநாயகவாதிகள் குறிப்பிட்ட ஓர் அரசில் எந்தத் தேசிய இனத்தையும் சேர்ந்த கழகங்களும் அடங்கலாய் எந்த

வகைப்பட்ட கூட்டிணைவையும் நிறுவிக் கொள்வதற்கான சுதந்திரத்தை எவ்விதத்திலும் மறுக்கவில்லை என்ற போதிலும், அவர்கள் மேற்கூறிய மாதிரி ஒன்று அமைய வேண்டுமெனக் கோருவதோ, அம்மாதிரியான ஒரு கூட்டிணைவை நிலைநாட்டுவதோ முடியாத காரியம் என்பது வெளிப்படை. ருஷ்யாவில் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வர்க்கங்களையும் சேர்ந்தோராய் இருக்கும் ஜெர்மானியரையும் இன்ன பிறரையும் தனியொரு ஜெர்மன்-தேசியக் கூட்டிணைவில் தனித்துப் பிரிந்திருக்கும்படி அரசுச் சட்டத்தின் மூலம் செய்வது சமயக் குருமார்கள், முதலாளித்துவ வர்க்கத்தார், குட்டிமுதலாளித்துவ அற்பர்கள் போன்ற எவரும் மேற்கொள்ளக் கூடிய காரியமாய் இருக்கலாம் —ஆனால் அது சமூக-ஜனநாயகவாதிகள் செய்யக் கூடிய காரியமன்று

## 5. தேசிய இனங்களின் சமத்துவமும் தேசியச் சிறுபான்மையோரின் உரிமைகளும்

ருஷ்யாவில் சந்தர்ப்பவாதிகள் தேசிய இனப் பிரச்சினை குறித்து விவாதிக்கையில் ஆஸ்திரியாவை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடுவது மிகவும் பரவலாய் அவர்கள் கைக்கொள்ளும் ஓர் உபாயமாகும். **சேவெர்னயா பிராவ்தாவில்** வெளியான எனது கட்டுரையை (**பிரோஸ்வெஷேனியெ**, இதழ் 10, பக்கங்கள் 96—98) சந்தர்ப்பவாதிகள் தாக்கியுள்ளனர் (திரு செம்கோவ்ஸ்கி **நோவயா ரபோச்சயா கஸேத்தாவிலும்**,*[20] திரு லீப்மன் **ஸைத்திலும்**). பொதுவாக முதலாளித்துவ உலகில் சாத்தியமாயிருக்கும் அளவுக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அதற்குள்ள வழி ஒன்றே ஒன்றுதான், முரணற்ற ஜனநாயகமே அவ்வழி என்று நான் அந்தக் கட்டுரையில் வலியுறுத்தினேன். இதற்கு நிரூபணமாய் ஏனைய பலவற்றுக்கும் இடையே சுவிட்சர்லாந்தைக் குறிப்பிட்டேன்.

---

* இப்பதிப்பின் பக்கங்கள் 6—11 பார்க்க.—(ப-ர்.)

· மேற்கூறிய இரு சந்தர்ப்பவாதிகளுக்கும் இது பிடிக்கவில்லை. அவர்கள் இதை மறுப்பதற்கு, அல்லது இதன் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறுவதற்கு முயலுகிறுர்கள். சுவிட்சர்லாந்து விதிவிலக்காகுமென காவுத்ஸ்கி கூறினுர், தெரியுமா என்கிறுர்கள். சுவிட்சர்லாந்து தனிச் சிறப்பு வாய்ந்த முறையில் பன்முகப்படுத்தப்பட்ட அரசதிகார அமைப்பும், தனிச் சிறப்புள்ள வரலாறும், தனிச் சிறப்புள்ள புவியியல் நிலைமைகளும், வெவ்வேறு மொழிகள் பேசுவோராலாகிய மக்களின் அதிவிசேஷப் பரப்பீடும், இன்ன பிறவும் கொண்டது என்றெல்லாம் சொல்கிறுர்கள்.

இவை யாவும் பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதற்கான முயற்சிகளே அன்றி வேறல்ல. மெய்தான், சுவிட்சர்லாந்து ஒற்றைத் தேசிய இன அரசல்ல என்பதால் அது விதிவிலக்குதான். ஆனுல் ஆஸ்திரியாவும் ருஷ்யாவுங்கூட விதிவிலக்கானவையே (அல்லது, காவுத்ஸ்கி மேலும் கூறுவது போல், பிற்பட்டவை). சுவிட்சர்லாந்தை அதன் தனிச் சிறப்பான, அதிவிசேஷமான வரலாற்று நிலைமைகளும் சமூக நிலைமைகளும்தான் பெருவாரியான அதன் ஐரோப்பிய அண்டை நாடுகளைக் காட்டிலும் அதிக ஜனநாயகம் வாய்ந்ததாகும்படி உறுதி செய்தன.

ஆனுல் எதை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டுமென்று பேசுகிற போது, இவற்றுக்கு எல்லாம் இங்கு என்ன சம்பந்தம்? அனைத்து உலகிலும் இன்று இருந்து வரும் நிலைமைகளில் எந்த ஒரு நிறுவனத்தையும் முரணற்ற ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைத்துக் கொண்டுள்ள நாடுகள் விதிவிலக்கானவையே. இந்த உண்மை நமது வேலைத்திட்டத்தில் எல்லா நிறுவனங்களிலும் முரணற்ற ஜனநாயகத்துக்காக நிற்பதிலிருந்து நம்மைத் தடுக்கவா செய்கிறது?

சுவிட்சர்லாந்தின் தனி இயல்புகள் அதன் வரலாற்றிலும் அதன் புவியியல் நிலைமைகளிலும் பிற நிலைமைகளிலும் காணக் கிடக்கின்றன. ருஷ்யாவின் தனி இயல்புகளாய் அமைந்தவை, முதலாளித்துவ புரட்சிகளின் சகாப்தத்தில் இதுகாறும் கண்டறியப்படாத அளவுக்கு அதன் பாட்டாளி வர்க்கம் பலம் படைத்ததாய் இருப்பதும்,

பொதுவாக இந்நாடு பயங்கரமான அளவுக்குப் பிற்பட்ட நிலையில் இருப்பதும் ஆகும். ருஷ்யாவின் இந்தப் பிற்பட்ட நிலையானது, அசாதாரண வேகத்தில் வைராக்கியமாய் முன்னேற வேண்டும் என்பதை எதார்த்தப் புற நோக்கில் அத்தியாவசிமானதாக்குகிறது, இப்படி முன்னேருவிடில் எல்லா விதமான சீர்கேடுகளும் தோல்விகளுமே ஏற்படு மென அச்சுறுத்துகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் கண்ணேட்டத்திலிருந்து நாம் தேசிய இன வேலைத்திட்டத்தை வகுத்து அமைத்து வருகிறோம். முன்மாதிரியாகக் கொள்வதற்குச் சிறந்த உதாரணங்களை அல்லாமல், மோசமானவற்றையா சிபார்சு செய்ய முடியும்?

எப்படியும், முதலாளித்துவத்தில் தேசிய அமைதி சாதிக்கப்பட்டிருப்பது (பொதுவாக அது சாதிக்கப்படக் கூடிய அளவுக்கு), முரணற்ற ஜனநாயகம் நிலவும் நாடுகளில் மட்டும்தான் என்பது மறுக்க முடியாது, மறுக்கப் படாத உண்மை அல்லவா?

இது மறுக்க முடியாத உண்மையாதலால், ஸ்விட்சர் லாந்துக்குப் பதில் ஆஸ்திரியாவைச் சந்தர்ப்பவாதிகள் விடாப்பிடியாகச் சுட்டிக்காட்டிப் பேசுவதானது, முழுக்க முழுக்க காடேட்டுகளுக்கு[21] உரிய ஓர் உபாயமே அன்றி வேறல்ல — ஏனெனில் ஐரோப்பிய அரசியலமைப்புகளில் சிறந்தவற்றை அல்லாமல் மோசமானவற்றையே காடேட்டுகள் எப்போதும் காப்பியடிப்பவர்கள்.

சுவிட்சர்லாந்தில் மூன்று ஆட்சி மொழிகள் உள்ளன. ஆனால் குடியொப்ப வாக்கெடுப்புக்குச் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள் ஐந்து மொழிகளில்—அதாவது மூன்று ஆட்சி மொழிகளை அன்னியில் இரு ''ரோமன்'' திசை மொழிகளிலும்—அச்சிடப்படுகின்றன. 1900ஆம் ஆண்டு மக்கள் கணக்கின்படி சுவிட்சர்லாந்தில் வசிக்கும் 33,15,443 பேரில் 38,651 பேர்தான், அதாவது ஒரு சதவீதத்துக்குச் சற்றே அதிகமானேர்தான், இவ்விரு திசைமொழிகள் பேசுவோர். சேனையில் பொறுப்புரிமை பெற்றேரும் பெருதோருமான எல்லா அதிகாரிகளும் ''படையாட்களுடன் அவர்களது தாய்மொழியில் பேசுவதற்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறுர்கள்.'' கிராவுபுந்தன், வால்

லிஸ் கன்டோன்களில் (ஒவ்வொன்றிலும் ஒரு லட்சத்துக்குச் சற்றே அதிகமான மக்களே வசிக்கிறார்கள் இவ்விரு திசைமொழிகளுக்கும் முழுநிறைச் சமத்துவம் அளிக்கப் பட்டிருக்கிறது.*

கேள்வி இதுதான்: முன்னேறிய ஒரு நாட்டின் இந்த உயிர் அனுபவத்தை நாம் பிரசாரம் செய்யவும் ஆதரித்து நிற்கவும் வேண்டுமா? அல்லது ஆஸ்திரியர்களிடமிருந்து ''நிலவரைக்கு உட்படாத தன்னாட்சி'' (extraterritorial autonomy) என்பதைப் போன்ற கண்டுபிடிப்புகளைக் கடன் வாங்க வேண்டுமா?—''நிலவரைக்கு உட்படாத தன்னாட்சி'' இது வரை உலகில் எவ்விடத்திலும் அனுபவ வாயிலாகச் சோதிக்கப்படாதது, ஆஸ்திரியர்களாலுங்கூட இதுவரை ஏற்கப்படாதது.

இந்தக் கண்டுபிடிப்புக்கான பிரசாரம், பள்ளிக்கூட விவகாரங்களைத் தேசிய இன வாரியாகத் தனித் தனியே பாகுபாடு செய்வதற்கான பிரசாரமாகும், அதாவது நேரடியாகவே தீங்கிழைக்கக் கூடிய ஒன்றுக்கான பிரசாரமாகும். ஆனால் சுவிட்சர்லாந்தின் அனுபவம் நிரூபிப்பது என்னவென்றால், மிக அதிக அளவிலான (ஒப்புநோக்கில்) தேசிய அமைதியானது அரசு முழுமையிலும் முரணற்ற (திரும்பவும் ஒப்புநோக்கில்) ஜனநாயகம் நிலவும் போது தான் நடைமுறையில் சாத்தியமாகிறது, சாதிக்கவும்படுகிறது.

''சுவிட்சர்லாந்தில், கிழக்கு-ஐரோப்பிய அர்த்தத்தில் தேசிய இனப் பிரச்சினை ஏதும் இல்லை'' என்று இப்பிரச்சினையை ஆராய்ந்துள்ளோர் கூறுகிறார்கள். ''இந்தத் தொடரே (தேசிய இனப் பிரச்சினை) இங்கு யாரும் கேட்டிராத ஒன்று... தேசிய இனங்களுக்கு இடையிலான போராட்டத்தை சுவிட்சர்லாந்து நெடுங் காலத்துக்கு முன்பே, 1797—1803ஆம் ஆண்டுகளிலேயே விட்டொழித்து விட்டது.''**

---

* ஆதாரம்: René Henry: *La Suisse et la question des langues*, Bern, 1907 (ரெனே அன்றி: சுவிட்சர்லாந்தும் மொழிப் பிரச்சினையும், பெர்ன், 1907.).—(ப-ர்).

** ஆதாரம்: Ed. Blocher: *Die Nationalitäten in der Schweiz*, Brl., 1910 (எட். புளோஹர்: சுவிட்சர்லாந்தின் தேசிய இனங்கள், பெர்லின், 1910.).—(ப-ர்.)

பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கு மாறிச் செல்லுகையில் எழும் பிரச்சினைகளுக்கு மிகவும் ஜனநாயக மான தீர்வு காண்பதற்கு வழி வகுத்திட்ட மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் சகாப்தமானது தேசியப் பிரச் சினைக்குப் போகிற போக்கில், தற்செயலாய்த் ''தீர்வு காண் பதில்'' வெற்றியடைந்தது என்பதுதான் இதற்கு அர்த்தம்.

இரண்டே லட்சம் மக்கள் தொகையில் நாற்பது ஆயிரம் பேர் இரு திசைமொழிகள் பேசுவோராய் இருந்து தமது பகுதியில் மொழிகளது முழு நிறைச் சமத்துவம் வேண்டுமெனக் கோரும் ருஷ்ய மாவட்டத்துக்கோ, மாவட் டத்தில் ஒரு பகுதிக்கோகூட ''முற்றிலும் சுவிட்சர்லாந் துக்கு மட்டுமே உரிய'' இந்தத் தீர்வு பொருந்தாது என்று வலியுறுத்த செம்கோவ்ஸ்கிகளும் லீப்மன்களும் ஏனைய சந்தப்பவாதிகளும் இப்போது முயற்சி செய்யட்டும்!

தேசிய இனங்கள், மொழிகள் இவற்றின் முழுநிறைச் சமத்துவத்தை ஆதரித்து நிற்பதானது, அந்தந்த தேசிய இனத்தையும் சேர்ந்த முரணற்ற ஜனநாயகக் கூறுகளை மட்டும் (அதாவது பாட்டாளி வர்க்கத்தாரை மட்டும்) வேறுபடுத்திக் காட்டி, இவர்களை எல்லாம் தேசிய இனத் தின் அடிப்படையில் அல்ல, அரசின் கட்டமைப்பு அனைத் தையும் முனைப்போடும் ஆழ்ந்த முறையிலும் திருத்தி மேம் படுத்துவதில் அவர்களுக்கு உள்ள அக்கறையின் அடிப் படையில் ஒன்றுபடச் செய்கிறது. இதற்கு மாருக, ''கலா சார-தேசியத் தன்னாட்சியை'' ஆதரித்து நிற்பதானது, தனி ஆட்களுக்கும் கோஷ்டிகளுக்கும் உள்ள ஆத்மார்த் திக விருப்பங்கள் எப்படி இருப்பினும், தேசிய இனங்களைப் பிளவுபடச் செய்கிறது; ஒரு தேசிய இனத்தின் தொழிலாளர் களை அத்தேசிய இனத்தின் முதலாளித்துவ வர்க்கத் தாரை நெருங்கிச் செல்ல வைக்கிறது (யூத முதலாளித் துவக் கட்சிகள் யாவற்ருலும் இந்த ''கலாசார-தேசியத் தன்னாட்சி'' ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது).

தேசியச் சிறுபான்மையோரது உரிமைகளை உத்தர வாதம் செய்வதானது, முழுநிறைச் சமத்துவக் கோட்பாட் டிலிருந்து பிரிக்க முடியாதவாறு அதனுடன் இணைந் துள்ளது. சேவெர்னயா பிராவ்தாவில் வெளிவந்த எனது கட் டுரையில் இந்தக் கோட்பாடு, அதற்கு பிற்பாடு வந்த அதி

கார பூர்வமான, அதிக துல்லியம் வாய்ந்த தீர்மானமாகிய மார்க்சியவாதிகளது மாநாட்டுத் தீர்மானத்தில் வெளியிடப்பட்டுள்ளது போல் ஏறத்தாழ அதே விதத்தில்தான் எடுத்துரைக்கப்பட்டது. மார்க்சியவாதிகளது மாநாட்டுத் தீர்மானம், ''எந்த ஒரு தேசிய இனத்துக்கும் இருந்து வரும் எல்லா விதமான தனியுரிமைகளும், மற்றும் தேசியச் சிறுபான்மையோரது உரிமைகளை எவ்விதத்திலும் மீறுகிறவை யாவும் செல்லத் தக்கவை அல்ல என்று அறிவிக்கும் அடிப்படைச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்'' என்று கோருகிறது.

திரு லீப்மன் இந்த வரையறுப்பைக் கேலி செய்ய முயலுகிறார், ''தேசியச் சிறுபான்மையோரது உரிமைகள் எவை என்பதை யார் அறிவார்?'' என்று அவர் கேட்கிறார். சிறுபான்மையோர் தேசியப் பள்ளிக்கூடங்களில் ''தமது சொந்தப் பாடத்திட்டத்தைக்'' கைக்கொள்வதற்குள்ள உரிமை இந்த உரிமைகளில் அடங்கியுள்ளதா? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார். தேசியச் சிறுபான்மையானது தனது சொந்த நீதிபதிகளையும் அதிகாரிகளையும் தமது தாய்மொழியில் பாடபோதனை நடைபெறும் பள்ளிக்கூடங்களையும் பெற உரிமையுடையோராவதற்கு அது எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டும்? ''நேர்நிலை'' தேசிய இன வேலைத்திட்டம் இன்றியமையாதது என்பதை இந்தக் கேள்விகளிலிருந்து அனுமானித்துக் கொள்ள வேண்டுமென திரு லீப்மன் விரும்புகிறார்.

ஏதோ சிறுதிறக் கூறுகளையும் தனிப்பட்ட விவரங்களையும் பற்றி விவாதிப்பதாகப் பாவனை செய்து கொண்டு, நமது புந்துக்காரர் எப்படிப்பட்ட பிற்போக்குக் கருத்துக்களைப் புகுத்தப் பார்க்கிறார் என்பதை உண்மையில் இந்தக் கேள்விகள் தெளிவாகக் காட்டுகின்றன.

தமது தேசியப் பள்ளிக்கூடங்களில் ''தமது சொந்தப் பாடத்திட்டம்!... அருமைத் தேசியவாத-சோஷலிஸ்டே, மார்க்சியவாதிகள் **பொதுவான** பள்ளிக்கூட வேலைத் திட்டத்துக்காக நிற்பவர்கள். அவர்களது திட்டம், உதாரணமாய், நிபந்தனை இல்லாத முறையில் சமயச் சார்பற்ற பள்ளிக்கூடங்கள் வேண்டுமெனக் கோருகிறது. மார்க்சியவாதிகளது கண்ணோட்டத்தின்படி ஜனநாயக

அரசில் இந்தப் பொதுவான திட்டத்திலிருந்து விலகிச் செல்ல எவ்விடத்திலும் எக்காலத்திலும் அனுமதிக்கப் படலாகாது (எந்த ''வட்டாரப்'' பாடங்கள், மொழிகள் முதலானவற்றை இந்தத் திட்டத்தில் புகுத்துவது என்கிற பிரச்சினை அந்தந்த வட்டாரத்து வாசிகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்). ஆனால் பள்ளிக்கூட விவகாரங்களை ''அரசின் அதிகாரத்திலிருந்து விலக்கி'' தேசிய இனங்களிடம் ஒப்படைத்தல் என்ற கோட்பாட்டிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், தொழிலாளர்களாகிய நாம் நமது ஜனநாயக அரசில் ''தேசிய இனங்கள்'' மக்களது பணத்தைச் சமயக் குருமார்களது பள்ளிக்கூடங்களுக்காகச் செலவிட அனுமதிக்க வேண்டும் என்பது தான்! திரு லீப்மன் தம்மை அறியாமலே ''கலாசார-தேசியத் தன்னாட்சியின்'' பிற்போக்குத் தன்மையைத் தெளிவாகவே தெரியப்படுத்தி விடுகிறார்!

''தேசியச் சிறுபான்மையானது எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டும்?'' புந்துக்காரர்களுக்குப் பிடித்தமான ஆஸ்திரிய வேலைத்திட்டத்திலுங்கூட இது வரையறுக்கப் படவில்லை: (நம்முடையதைக் காட்டிலும் மேலும் சுருக்கமாகவும் மேலும் குறைவான தெளிவோடும்) அது கூறுவதாவது: ''பேரரச நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப் படும் தனிச் சட்டம் ஒன்றால் தேசியச் சிறுபான்மையோரது உரிமைகள் பாதுகாக்கப்படும்'' (புரூன் வேலைத்திட்டத்தின் §4).

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளிடம் அந்தத் தனிச் சட்டம் என்ன, யார் யார் எல்லாம் தேசியச் சிறுபான்மையோர், பாதுகாக்கப்படப் போகிற உரிமைகள் எவை என்றெல்லாம் யாரும் கேட்கவில்லையே, ஏன்?

ஏன் கேட்கவில்லை என்றால், தனிப்பட்ட விவரங்களை வேலைத்திட்டத்தில் வரையறுத்துக் குறிப்பிடுவது பொருத்தமாயிராது, சாத்தியமும் அல்ல என்பது அறிவுள்ளவர்கள் எல்லோருக்கும் புரிகிறது. வேலைத்திட்டமானது அடிப்படைக் கோட்பாடுகளை மட்டும்தான் வரையறுத்திடுகிறது. இந்த உதாரணத்தில் அடிப்படைக் கோட்பாடு ஆஸ்திரியர்களைப் பொறுத்த வரை உட்பொருளாய் அடங்கியிருக்கிறது; ருஷ்ய மார்க்சியவாதிகளது சமீபத்திய மாநாட்

டின்[22] தீர்மானத்தில் நேரடியாகவே எடுத்துரைக்கப்படு கிறது. எந்த விதமான தேசிய இனத் தனியுரிமைகளும் இல்லை, தேசிய இனங்களது எந்த விதமான அசமத்துவமும் இல்லை என்பதே அந்தக் கோட்பாடு.

புந்துக்காரருக்குப் பிரச்சினையைத் தெளிவுபடுத்தும் பொருட்டு ஸ்தூலமான உதாரணம் ஒன்றை எடுத்துக் கொள்வோம். 1911 ஜனவரி 18 பள்ளிக்கூடக் கணக்குப் பதிவின்படி பொதுக் ''கல்வி'' அமைச்சகத்தின் கீழ் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரிலிருந்த ஆரம்பப் பள்ளி களில் 48,076 மாணுக்கர்கள் இருந்தனர். இவர்களில் 396 பேர், அதாவது ஒரு சதவீதத்துக்கும் குறைவானோர் யூதர்கள். ஏனையோரது விவரங்களாவன: ருமேனியர்கள் —2, ஜியார்ஜியர்கள்—1, ஆர்மீனியர்கள்—3... பல் வேறுபட்டதாயுள்ள இந்த உறவுகளும் நிலைமைகளும் உள் ளடங்கும்படியான ''நேர்முக'' தேசிய இன வேலைத்திட் டத்தை வகுத்திடுவது சாத்தியமா? (செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கை ருஷ்யாவில் அதிக அளவுக்குக் கலப்படமான நகரவாசிகளைக் கொண்ட நகராய் ஒருபோதும் சொல்ல முடியாது.) புந்துக்காரர்களைப் போல் தேசிய இன ''நுட்பங்களில்'' விற்பன்னர்களாய் இருப்போருங்கூட இம்மாதிரியான ஒரு வேலைத்திட்டத்தை வகுத்திடுவது முடியாத காரியமாகும்.

ஆனல் எந்த சிறுபான்மையினரது உரிமைகளையும் மீறு வதாய் இருக்கும் எந்த நடவடிக்கையும் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கும் அடிப்படைச் சட்டம் ஒன்று நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் அடங்கியிருக்குமாயின், அர சின் செலவில், உதாரணமாய், ஹீப்ரு மொழி, யூதர்களது வரலாறு போன்றவற்றுக்காக விசேஷ ஆசிரியர்கள் அமர்த் தப்படுவதற்கோ—யூத, ஆர்மீனிய அல்லது ருமேனியக் குழந்தைகளுக்காக, அல்லது ஒரேயொரு ஜியார்ஜியக் குழந்தைக்காகக் கூட பாடங்கள் நடத்த அரசின் உடை மையிலுள்ள இட வசதிகள் உபயோகிக்கப்படுவதற்கோ —தடை விதிக்கும் உத்தரவுகள் ரத்து செய்யப்பட வேண்டு மென எந்தக் குடிமகனும் கோர முடியும். எப்படியும், தேசியச் சிறுபான்மையோரது நியாயமான, அறிவுக்கு கந்த எல்லாக் கோரிக்கைகளையும் சமத்துவத்தின் அடிப்

படையில் திருப்தி செய்வது எவ்விதத்திலும் முடியாத காரியமல்ல; சமத்துவத்துக்கான பிரசாரம் தீங்கான தென்று யாரும் சொல்ல மாட்டார்கள். இதற்கு மாருக, தேசிய இன வழியில் பள்ளிக்கூடங்களைப் பிரித்துப் பாகு பாடு செய்ய வேண்டும் என்கிற பிரசாரம், உதாரண மாகச் செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலுள்ள யூதக் குழந்தை களுக்காக விசேஷப் பள்ளிக்கூடங்கள் வேண்டும் என்கிற பிரசாரம், நிச்சயமாய்த் தீங்கானதுதான்—ஒவ்வொரு தேசியச் சிறுபான்மைக்காகவும், ஒன்று, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுக்காகத் தேசிய இனப் பள்ளிக்கூடங் கள் அமைத்திடுவது அறவே முடியாத காரியமாகும்.

மேலும், நாடு தழுவிய அளவிலான எந்தச் சட்டத்தி லும், விசேஷப் பள்ளிக்கூடங்களுக்கு, அல்லது கூடுதலான பாடங்களுக்காக விசேஷ ஆசிரியர்களை நியமிக்கவும் இன்ன பிறவற்றுக்கும் உரிமை பெறுவதற்காகத் தேசியச் சிறு பான்மை எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டுமென்று வரையறை செய்வது சாத்தியமன்று.

இவ்வாறன்றி, சமத்துவத்தை நிலைநாட்டும் நாடு தழுவிய அளவிலான சட்டத்தை விவரமாக அமைத்திட வும், விசேஷ விதிமுறைகள் மூலமும் பிராந்திய அவைகள், நகரங்கள், ஸேம்ஸ்துவோக்கள், கிராமச் சமுதாயங்கள் முதலானவற்றின் தீர்மானங்கள் மூலமும் வளர்த்துச் செல்லவும் முடியும்.

## 6. மையப்படுத்தலும் தன்னுட்சியும்

திரு லீப்மன் அவரது மறுப்புரையில் எழுதுகிருர்:

''நமது லித்துவேனியா, பால்டிக் மாநிலம், போலந்து, வலீனியா, தெற்கு ருஷ்யா முதலானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள் — எங்கும் கலப்பட மக்கள் தொகை இருக்கக் காண்பீர்கள்; தேசியச் சிறுபான்மை பெரிதா யிராத ஒரு நகரங்கூட இங்கு இல்லை. அதிகாரம் எவ் வளவுதான் பரவலாக்கப்பட்ட போதிலும், பற்பல இடங் களில் (முக்கியமாய் நகர சமூகங்களில்) பற்பல தேசிய இனங்களும் சேர்ந்து வாழ்வதை எப்போதுமே காணலாம்.

தேசிய சிறுபான்மையைத் தேசியப் பெரும்பான்மைக்குக் கீழ்ப்படச் செய்தல் ஜனநாயகத் தன்மை வாய்ந்தது தான். ஆனால் கூட்டாட்சி அரசு அமைப்பையும் ஸ்விஸ் கூட்டாட்சி அரசில் இருக்கக் கூடிய அதிக பட்ச அதிகாரப் பரவலையும் வி.இ. எதிர்ப்பவர் என்பது நமக்குத் தெரியும். கேள்வி என்னவெனில்: எதற்காக சுவிட்சர் லாந்தை அவர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகிறார்?''

சுவிட்சர்லாந்தை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடுவதில் எனது நோக்கம் என்ன வென்பதை ஏற்கெனவே நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். தேசியச் சிறுபான்மையோரது உரிமைகளைப் பாதுகாக்கும் பிரச்சினைக்கு, சமத்துவமெனும் கோட்பாட்டிலிருந்து விலகாத முரணற்ற ஜனநாயக அரசில் நாடு தழுவிய அளவிலான சட்டத்தை இயற்றிச் செயல்படுத்துவதன் மூலம் மட்டுமே தீர்வு காண முடியும் என்பதையும் விளக்கினேன். ஆனால் மேற்கூறிய வாசகத்தில் திரு லீப்மன், மார்க்சியத் தேசிய இன வேலைத்திட்டத்துக்கு எதிராய் மிக அதிகமாய் எடுத்தாளப்படுகிற (மிகத் தவறான) வாதங்களில் (அல்லது அவநம்பிக்கை வாய்ந்த குறிப்புகளில்) மற்றும் ஒன்றை அப்படியே திருப்பிச் சொல்கிறார். வழக்கமாகக் கூறப்பட்டு வருவதால் இதனைப் பரிசீலிப்பது பொருத்தமாய் இருக்கும்.

கூட்டரசையும் அதிகாரப் பரவலையும் மார்க்சியவாதிகள் நிச்சயமாய் எதிர்ப்பவர்கள்தான் இதற்குக் காரணம் எளிமையானது, முதலாளித்துவம் அதன் வளர்ச்சிக்கு சாத்தியமான அளவுக்கு மிகப் பெரிதாகவும் மிகுந்த மையத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்த அரசுகள் வேண்டுமெனக் கோருகிறது என்பதே இந்தக் காரணம். ஏனைய நிலைமைகள் ஒரே மாதிரியாய் இருக்கையில், அரசானது அதிகம் பெரிதாய் இருக்க வேண்டுமென்பதே உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கத்தின் நிலையாகும். இது எப்போதும் மத்திய காலப் பிரத்தியேகத்தன்மையை எதிர்த்துப் போராடும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான பாட்டாளி வர்க்கப் போராட்டம் விரிவான அடிப்படையில் வளர முடியும்படி பெரிதாயுள்ள பிரதேசங்கள் கூடுமான அளவுக்கு மிக நெருங்கிய பொருளாதார இணைப்புப் பெறுவதை எப்போதுமே இவ்வர்க்கம் ஆதரிக்கிறது.

பொருளுற்பத்தி சக்திகளது விரிவான அதிவேக வளர்ச்சிக்காக முதலாளித்துவமானது, அரசால் உறுதியாக இணைக்கப் பெற்று ஒன்றுபடுத்தப்பட்ட பெரும் பிரதேசங்கள் வேண்டுமெனக் கோருகிறது. ஏனெனில் இவ்வாறு அமைந்த பிரதேசங்களில்தான் முதலாளித்துவ வர்க்கமும் அதோடு கூட அதன் தவிர்க்க முடியாத எதிர் முனையான பாட்டாளி வர்க்கமும் சேர்ந்து, பழயவையும் மத்திய காலத்துக்கு உரியவையும் சாதி முறையானவையும் குறுகிய வட்டாரம் சார்ந்தவையும் அற்பச் சிறு தேசியவாதத் தன்மையவையும் சமய வழிப்பட்டவையும் ஏனைய எல்லா வகைப்பட்டவையுமான தடைமதில்களைத் தகர்த்தெறிய முடியும்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, அதாவது பிரிந்து சென்று சுயேச்சையான தேசிய அரசுகள் அமைத்துக் கொள்வதற்கான உரிமை குறித்து வேறொரு இடத்தில் பரிசீலிப்போம்.* ஆனால் பல்வேறு தேசிய இனங்களும் ஓர் அரசாய் இருக்கும் போதும், இருக்கிற வரையிலும் மார்க்சியவாதிகள் எந்த நிலைமைகளிலும் கூட்டரசுக் கோட்பாட்டையோ, அதிகாரப் பரவலையோ ஆதரித்து நிற்க மாட்டார்கள். மையத்துவமடைந்த பெரிய அரசானது மத்திய கால ஒற்றுமையின்மையிலிருந்து அனைத்து உலகின் வருங்கால சோஷலிச ஒற்றுமையை நோக்கி அமைந்த பிரமாண்டமான வரலாற்று வழியான முன்னேற்ற அடியாகும், இம்மாதிரியான அரசின் (முதலாளித்துவத்திலிருந்து பிரிக்க முடியாதபடி அதனுடன் இணைந்த அரசின்) மூலம் மட்டுமே சோஷலிசத்துக்கான எந்தப் பாதையும் அமைய முடியும்.

ஆனால் மையத்துவத்தை ஆதரித்து நிற்கையில் நாம் முழுக்க முழுக்க ஜனநாயக மையத்துவத்தையே ஆதரித்து நிற்கிறோம் என்பதை மறப்பது மன்னிக்க முடியாததாகும். இது குறித்துப் பொதுவாக எல்லாக் குட்டிமுதலாளித்துவ அற்பர்களும், குறிப்பாகத் தேசியக் குட்டிமுதலாளித்துவ அற்பர்களும் (காலஞ் சென்ற திரகமானவும் உட்பட)

---

* பார்க்கவும்: தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை —(ப-ர்.).

பிரச்சினையை அப்படிக் குழப்படி செய்திருப்பதால் அதைத் தெளிவுபடுத்துவதற்காக நாம் திரும்பத் திரும்ப நேரம் செலவிட வேண்டியிருக்கிறது.

ஜனநாயக மையத்துவம் வட்டார ஆட்சியையும் அதனுடன் விசேஷப் பொருளாதார, சமுதாய நிலைமைகளையும் வாழும் மக்களது திட்டவட்டமான தேசிய இயைபினையும் இன்ன பிறவற்றையும் கொண்ட பிராந்தியங்களுக்குத் தன்னாட்சியையும் மறுக்கவில்லை என்பது மட்டுமல்ல; **முன்னதையும் பின்னதையும்** அத்தியாவசியமெனக் கூறி இரண்டையும் கோருகிறது. ருஷ்யாவில் மையத்துவத்தை ஓயாமல் கொடுங்கோன்மையுடனும் அதிகாரவர்க்க முறையுடனும் போட்டுக் குழப்புகிறார்கள். ருஷ்யாவின் வரலாற்றிலிருந்து இயற்கையாகவே எழும் குழப்படி இது. ஆயினும் மார்க்சியவாதி இதற்குப் பணிவது சிறிதும் மன்னிக்க முடியாததாகும்.

ஒரு ஸ்தூலமான உதாரணத்தைக் கொண்டு இதனை எளிதில் விளங்க வைக்கலாம்.

**தேசிய இனப் பிரச்சினையும் தன்னாட்சியும்*** என்ற நீண்ட கட்டுரையில் ரோசா லுக்சம்பர்க், ஏனைய பல விநோதமான தவறுகளுடன் கூட (இவை குறித்துப் பின்னால் பார்ப்போம்). தன்னாட்சிக் கோரிக்கையை விதிவிலக்காகப் போலந்துக்கு மட்டும் எழுப்பக் கூடியதாகக் **கட்டுப்படுத்த** முயற்சிக்கும் அதிவிநோதத் தவறினையும் புரிகின்றார்.

ஆனால் முதலில் தன்னாட்சிக்கு அவர் **எப்படி** இலக்கணம் கூறுகிறார் என்று பார்ப்போம்.

முதலாளித்துவ சமுதாயத்தின் முக்கியமான, ஜீவாதாரமான பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் யாவும் முற்றிலும் அந்தந்த நாடு முழுமைக்குமான மத்திய நாடாளுமன்றத்தின் அதிகாரத்துக்கு உரியவையே அன்றி பிராந்தியங்களின் தன்னாட்சி அவைகளின் அதிகாரத்துக்கு அல்ல என்பதை ரோசா லுக்சம்பர்க் ஏற்றுக் கொள்கிறார் —மார்க்சியவாதியான அவர் நிச்சயம் இதனை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவராய் இருக்கிறார். இந்தப் பிரச்

* *Przeglad Socjaldemokratyczny*,[23] Kraków, *1908 மற்றும் 1909*.

சினைகளில் அடங்குகிறவை வருமாறு: சுங்க வரிக் கொள்கை, வாணிபத்தையும் தொழில் துறையையும் பற்றிய சட்ட விவகாரங்கள், போக்குவரத்துக்கும் செய்தித் தொடர்புக்குமான சாதனங்கள் (ரயில் பாதைகள், அஞ்சல், தந்தி, தொலைபேசி முதலானவை), சேனை, வரி விதிப்பு முறை, உரிமையியல்*, குற்றவியல் சட்டம், கல்வித் துறைப் பொதுக் கோட்பாடுகள் (உதாரணமாய், சமயச் சார்பு சிறிதும் இல்லாத பள்ளிகளையும் எல்லோருக்குமான கல்வியையும் குறைந்தபட்ச பாடத் திட்டத்தையும் ஜனநாயகமான பள்ளி நிர்வாகத்தையும் இன்ன பிறவற்றையும் பற்றிய சட்டங்கள்), தொழிலாளர் காப்புச் சட்டங்கள், அரசியல் சுதந்திரங்கள் (ஒன்றுகூடுவதற்கு உரிமை), இப்படி இன்னும் பல.

தன்னாட்சி அவைகள்—அரசு அனைத்துக்குமான பொதுச் சட்டங்களின் அடிப்படையில்—முற்றிலும் வட்டார, பிராந்திய அல்லது தேசிய இன முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து அதிகாரம் செலுத்த வேண்டும். இந்தக் கருத்தினை ரோசா லுக்சம்பர்க் மிகவும் விவரமாய்—மிதமிஞ்சிய அளவுக்கு விவரமாய் என்றுகூட சொல்லலாம்—விரித்துரைத்து, உதாரணமாய், வட்டார முக்கியத்துவம் வாய்ந்த ரயில் பாதைகளும் (இதழ் 12, பக்கம் 149) நெடுஞ் சாலைகளும் (இதழ் 14—15, பக்கம் 376) போடுவதையும் பிறவற்றையும் குறிப்பிடுகிறார்.

ஏதேனும் ஓர் அளவுக்குக் குறிப்பிடத்தக்க தனித்தன்மை வாய்ந்த பொருளாதார, சமுதாய இயல்புகளும் பிரத்தியேகமான தேசிய இன இயைபு கொண்ட மக்களையும் இன்ன பிறவற்றையும் பெற்றிருக்கும் ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் இம்மாதிரியான தன்னாட்சி வழங்காத மெய்யாகவே ஜனநாயகம் வாய்ந்த இக்கால அரசு ஒன்றை நினைத்தே பார்க்க முடியாது என்பது வெளிப்படை. முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகிய மையத்துவக் கோட்பாடானது இந்த மாதிரியான (வட்

* தமது கருத்துக்களை விளக்கிக் கூறுகையில் ரோசா லுக்சம்பர்க் விவரங்களில் புகுகின்றார்; உதாரணமாய்—மிகவும் நியாயமாகவே—திருமண விலக்கு விதிகளைக் குறிப்பிடுகிறார் (மேற்கூறிய சஞ்சிகை இதழ் 12, பக்கம் 162).

டார, பிராந்திய) தன்னாட்சியால் மீறப்பட்டு விடவில்லை என்பதோடு, இதற்கு மாறாக இதனால் அந்தக் கோட்பாடு ஜனநாயக வழியில்—அதிகாரவர்க்க வழியில் அல்ல—செயல்படுத்தப்படுகிறது. இத்தகைய தன்னாட்சி இருக்காவிடில் முதலாளித்துவம் விரிவாகவும் தங்குதடையின்றியும் விரைவாகவும் வளர்ச்சி பெறுவது சாத்தியமல்ல, அல்லது குறைந்தது இந்த வளர்ச்சி வெகுவாகத் தடுக்கப்பட நேரும். மூலதனம் ஒன்றுகுவிதலுக்கும் உற்பத்திச் சக்திகள் வளர்வதற்கும் நாடு தழுவிய அளவில் முதலாளித்துவத்தின் ஒற்றுமைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்கும் இந்தத் தன்னாட்சி அனுசரணையாய் இருக்கும். ஏனெனில் முற்றிலும் வட்டாரப் பிரச்சினைகளில் (பிராந்திய, தேசிய இன, இன்ன பிற பிரச்சினைகளில்) அதிகார வர்க்க முறையிலான தலையீடு பொதுவாகப் பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்கு மிகப் பெரியதொரு முட்டுக்கட்டையாகவும், குறிப்பாக முனைப்பு வாய்ந்த முக்கியமான அடிப்படை விவகாரங்களில் மையத்துவத்துக்குத் தடங்கலாகவும் இருக்கிறது.

ஆகவே, சிறப்புக்குரிய நமது ரோசா லுக்சம்பர்க் எழுதுவதைப் படிக்கையில் நகைக்காமல் இருப்பதற்கில்லை—கருத்தார்ந்த பாவனையோடு, ''தூய மார்க்சியத்'' தொடர்களைக் கையாண்டு, தன்னாட்சிக் கோரிக்கையானது போலந்துக்கு மட்டும்தான் பொருத்தமானது, அதுவும் விதிவிலக்காக மட்டும்தான் என்று அவர் நிரூபிக்க முயலுகிறார்! ''குறுகிய பிராந்திய'' பக்தி துளிக்கூட இங்கு இல்லவே இல்லை, ''காரியார்த்தமான'' நோக்கங்கள் மட்டும்தான் உள்ளன... உதாரணமாய் லித்துவேனியாவைக் கவனிக்கலாம்.

வில்னா, கோவ்னா, குரோத்னோ, சுவால்கி ஆகிய நான்கு மாநிலங்களை ரோசா லுக்சம்பர்க் எடுத்துக் கொள்கிறார். லித்துவேனியர்கள் ''பிரதானமாய்'' இவற்றில் வசிப்பதாய் வாசகர்களையும் (மற்றும் தம்மையும்) நம்ப வைக்கிறார். இந்த மாநிலங்களில் வசிப்போரின் மொத்த எண்ணிக்கையைக் கூட்டிக் கணக்கிட்டு, இவற்றின் மொத்த மக்கள் தொகையில் லித்துவேனியர்களின் சதவீதம் 23 ஆக இருக்கக் காண்கிறார். லித்துவேனியர்களோடு ழுமுது

களையும் சேர்த்துக் கொண்டால் மக்கள் தொகையில் அவர்கள் 31 சதவீதமே—மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவாகவே—இருக்கிறார்கள். இதிலிருந்து இயற்கையாகவே பெறப்படுவது என்னவெனில், லித்துவேனியாவுக்குத் தன்னாட்சி என்னும் கருத்து ''தான்தோன்றித்தனமானது, செயற்கையானது'' (இதழ் 10, பக்கம் 807).

அதிகாரபூர்வமான நமது ருஷ்யப் புள்ளிவிவரங்களின் குறைபாடுகள் பொதுவாகப் பலருக்கும் தெரிந்தவையே, இந்தக் குறைபாடுகளை அறிந்த வாசகர் ரோசா லுக்சம்பர்க் புரிந்திடும் தவறினை உடனே கண்டு கொண்டு விடலாம். குரோத்னோ மாநிலத்தில் லித்துவேனியர்கள் 0.2 சதவீதமே, ஒரு சதவீதத்தில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே இருக்கிறார்கள்—எதற்காக இந்த மாநிலத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்? வில்னா மாநிலம் முழுமையையும் எடுத்துக் கொள்வானேன்? இம்மாநிலத்தின் திரோக்கி மாவட்டத்தில் லித்துவேனியர்கள் பெரும்பான்மையினராய் இருக்கிறார்களே, இந்த மாவட்டத்தை மட்டும் எடுத்துக் கொள்ளக் கூடாதா? சுவால்கி மாநிலம் பூராவையும் எடுத்துக் கொண்டு, லித்துவேனியர்களது எண்ணிக்கையை மொத்த மக்கள் தொகையில் 52 சதவீதம் என்பதாய் ஏன் குறிக்க வேண்டும்? அந்த மாநிலத்தில் உள்ள லித்துவேனிய மாவட்டங்கள்—அதாவது ஏழில் ஐந்தாக உள்ள இவற்றில்—மக்கள் தொகையில் 72 சதவீதத்தினர் லித்துவேனியர்களாய் இருக்கையில், இம்மாவட்டங்களுக்குப் பதில் முழு மாநிலத்தையும் எடுப்பது எதற்காக?

தற்கால முதலாளித்துவத்தின் நிலைமைகளையும் தேவைகளையும் பற்றிப் பேசிக் கொண்டு அதே போது, ''தற்காலத்தவையோ'', ''முதலாளித்துவத்தினுடையவையோ'' அல்லாமல், மத்திய கால, பிரபுத்துவ, அரசாங்கத்து-அதிகாரவர்க்க ருஷ்ய நிர்வாக பரப்பு எல்லைப் பிரிவினைகளை, அதுவும் அவற்றின் படுமோசமான வடிவில் (மாவட்டங்களுக்குப் பதிலாய் மாநிலங்களை) எடுத்துக் கொள்வது நகைக்கத் தக்கதாகும். இந்தப் பிரிவினைகள் ஒழிக்கப்பட்டு, இவற்றுக்குப் பதில்—அரசாங்கத்தினுடையவை அல்ல, அதிகாரவர்க்கத்தினுடையவை அல்ல, மாமூல் முறைகளினுடையவை அல்ல, நிலப்பிரபுக்களுடை

யவை அல்ல, சமயக் குருமார்களுடையவை அல்ல— முதலாளித்துவத்தினுடைய தேவைகளுக்கு மெய்யாகவே உகந்தவாறு அமைந்த மெய்யாகவே ''தற்காலத்து'' எல்லைப் பிரிவினை வகுத்தமைக்கப்படாத வரை ருஷ்யா வில் எவ்விதமான, எந்த அளவுக்கும் கருத்தார்ந்த வட் டாரச் சீர்திருத்தம் குறித்தும் பேச முடியாது, இது தெட்டத் தெளிவானது. வட்டாரத்து மக்கள் சாத்திய மான அதிக அளவுக்கு தேசிய இன ஒருமை வாய்ந்தோ ராய் இருப்பது சந்தேகத்துக்கு இடமின்றி முதலாளித் துவத்தின் தற்காலத் தேவைகளில் ஒன்றாகும். ஏனெனில் தேசிய இன, மொழி ஒருமையானது உள்நாட்டுச் சந் தையை முழு அளவுக்குக் கைப்பற்றிக் கொள்வதற்கும் பொருளாதார ஒட்டுறவின் முழுச் சுதந்திரத்துக்கும் வகை செய்யும் முக்கிய காரணக் கூறாகும்.

விபரீதம் என்னவெனில் ரோசா லுக்சம்பர்க் தெளி வாகவே புரிந்திடும் இந்தத் தவறினை புந்துக்காரரான மெதெம் அப்படியே திருப்பிச் செய்கிறார். இவர் நிரூபிக்க விரும்புவது போலந்தின் பிரத்தியேக இயல்புகள் ''விதி விலக்கானவை'' என்பதல்ல, தேசிய-பிரதேசத் தன்னாட் சிக் கோட்பாடு பொருத்தமானதல்ல என்று அவர் நிரூ பிக்க விரும்புகிறார் (புந்துக்காரர்கள் நிலவரைக்கு உட்ப டாத (extra-territorial) தேசிய இனத் தன்னாட்சிக்காக நிற் பவர்கள்!). நமது புந்துக்காரர்களும் கலைப்புவாதிகளும் உலகெங்கும் வெவ்வேறு நாடுகளின், வெவ்வேறு தேசிய இனங்களின் சமூக-ஜனநாயகவாதிகளும் புரிந்திடும் எல் லாத் தவறுகளையும் அவர்களது எல்லாச் சீர்திருத்தவாத ஊசலாட்டங்களையும் சேகரித்து, உலக சமூக-ஜனநாயகத் தில் அவர்கள் காணக் கூடிய படுமோசமானவற்றைத் தம தாக்கிக் கொள்கிறவர்கள். புந்துக்காரர்கள், கலைப்புவாதி கள் ஆகியோரது எழுத்துக்களை ஒட்டிச் சேர்த்தால் அது முன்மாதிரியான சமூக-ஜனநாயக நலக் கேட்டின் கண்காட்சி யாய் அமையும்.

பிராந்தியத் தன்னாட்சி ஒரு பிராந்தியம் அல்லது ''பிர தேசத்துக்கு'' நல்லதுதான், ஆனால் லாத்விய, எஸ்தோனிய அல்லது பிற பரப்புகளுக்கு (okrugs) ஒவ்வாதது, இந்தப் பரப்புகள் ஐந்து லட்சத்திலிருந்து இருபது லட்சம் வரை

யிலான மக்கள் தொகையும் பரப்பளவில் மாநிலத்துக்குச் சமமாகவும் இருப்பவை என்று மெதெம் நமக்குப் போதனை செய்கிறார். ''அது தன்னாட்சியாய் இராது, ஸேம்ஸ்துவோ வாகவே இருக்கும்.... இந்த ஸேம்ஸ்துவோவுக்கு மேல் மெய்யான தன்னாட்சியை நிறுவுவது அவசியமாகும்''... இந்த ஆசிரியர் மேலும் தொடர்ந்து எழுதுகையில் பழைய மாநிலங்களும் மாவட்டங்களும் ''சிதைக்கப்படுவதைக்'' கண்டிக்கிறார்.*

மத்திய கால, பிரபுத்துவ, அரசாங்க நிர்வாக எல்லைப் பிரிவினைகளின் பாதுகாப்பு உண்மையில், தற்கால முதலாளித்துவத்துக்கு வேண்டிய நிலைமைகள் ''சிதைக்கப்படுவதையும்'' முடமாக்கப்படுவதையுமே குறிப்பதாகும். இந்தப் பிரிவினைகளின் மனப்பாங்கில் ஊறியவர்களால் தான் நிபுணரது ''ஆய்ந்தறிந்த பாவனையுடன்'' ''ஸேம்ஸ்துவோவும்'' ''தன்னாட்சியும்'' ஒன்றுக்கொன்று எதிராய் அமைந்திருப்பது பற்றிய ஊகங்களில் இறங்கி மாறாத மாமூலின்படி ''தன்னாட்சி'' பெரிய பிராந்தியங்களுக்கும் ஸேம்ஸ்துவோ சிறு பகுதிகளுக்கும் கையாளப்பட வேண்டுமெனக் கூற முடியும். இந்த அதிகாரவர்க்க மாமூல் முறைகள் தற்கால முதலாளித்துவம் ஒருபோதும் வேண்டுமெனக் கோரவில்லை. 5 லட்சம் அல்ல, 50,000 பேரையே கொண்ட தேசிய இனப் பரப்புகள் தன்னாட்சியைக் கைக்கொள்ள ஏன் முடியாது? இப்பரப்புகள் பல்வேறு பரிமாணங்களிலும் உள்ள அண்டைப் பரப்புகளுடன் சேர்ந்து தன்னாட்சிப் பிரதேசமாய் அமைவது பொருளாதார ஒட்டுறவுக்கு வசதியாகவோ, அவசியமாகவோ இருக்குமாயின் அவை ஏன் இப்படி ஒன்றுபடக் கூடாது? இவை எல்லாம் புந்துக்காரர் மெதெமினுடைய இரகசியங்களாய் இருப்பவை.

புருன் சமூக-ஜனநாயகத் தேசிய இன வேலைத்திட்டம் முற்றிலும் நிலவரைக்கு உட்பட்ட தேசிய இனத் தன்னாட்சியின் அடிப்படையில் அமைந்தது என்பதைக் குறிப்பிடலாம். ''வரலாற்று முடியாட்சி நிலங்களுக்குப் பதில்''

---

* வி. மெதெம்: ருஷ்யாவில் தேசிய இனப் பிரச்சினையின் அறிமுகத்துக்கு ஒரு காணிக்கை, வெஸ்த்னிக் எவ்ரோப்பு,[24] 1912, இதழ்கள் 8, 9.

''தேசிய இன வழி அமைந்த'' பரப்புகளாக ஆஸ்திரியா பிரிக்கப்பட வேண்டுமென்று புரூன் வேலைத்திட்டம் முன்மொழிகிறது (புரூன் வேலைத்திட்டத்தின் 2ஆம் பிரிவு). நாங்கள் அந்த அளவுக்குப் போகவில்லை. சுதந்திரமான, விரிவான, மெய்யாகவே தற்காலத்துக்குரிய வாணிப ஒட்டுறவுக்கு வகை செய்யும் மிகவும் நம்பகமான காரணக் கூறுகளில் ஒன்று ஒருபடித்தான தேசிய இனமாய் அமைந்த மக்கள் தொகையாகும் என்பதில் சந்தேகமில்லை. மார்க்சியவாதி எவரும், உறுதி வாய்ந்த எந்த ஜனநாயகவாதியுங்கூட ஆஸ்திரிய முடியாட்சி நிலங்களையும் ருஷ்யாவின் மாநிலங்களையும் மாவட்டங்களையும் ஆதரித்து நிற்க மாட்டார் என்பதும் (பின்னவை ஆஸ்திரிய முடியாட்சி நிலங்களைப் போல் அவ்வளவு மோசமானவை அல்ல என்றாலும், அவையும் மோசமானவையே), காலங் கடந்தவையான இந்தப் பிரிவினைகள் ஒழிக்கப்பட்டு அவற்றின் இடத்தில் கூடுமான அளவுக்கு மக்களது தேசிய இன இயைபுக்கு உகந்தவையான ஏனைய பிரிவினைகள் நிலைநாட்டப்பட வேண்டிய அவசியத்தை மறுக்க மாட்டார் என்பதும் சந்தேகத்துக்கு இடம் இல்லாதவை. முடிவில், எல்லா விதமான தேசிய இன ஒடுக்குமுறையையும் அகற்றும் பொருட்டு, எவ்வளவுதான் சிறியவையாக இருப்பினும், முழு அளவுக்கு ஒருமை வாய்ந்த தேசிய இனத்தோரான தன்னாட்சிப் பரப்புகளை நிறுவுவதும் மிகமிக முக்கியம் என்பதும் சந்தேகத்துக்கு இடமில்லாதது. இந்தத் தேசிய இனப் பரப்புகளை நாடெங்கும் அல்லது உலகெங்குங்கூட சிதறி வாழும் அந்தந்த தேசிய இனத்தோரும் தமது கவர்ச்சி மையமாகக் கொள்ள முடியும், அவற்றுடன் எல்லா வகையான உறவுகளும் சுதந்திரமான பிணைப்புகளும் நிறுவிக் கொள்ள முடியும். இவை எல்லாம் மறுக்க முடியாதவை, முரட்டுப் பிடிவாதம் கொண்ட அதிகார வர்க்கக் கண்ணோட்டத்தினர் மட்டுமே இவற்றை எதிர்த்து வாதாட முடியும்.

ஆனால் மக்கள் தொகையின் தேசிய இன இயைபு மிகவும் முக்கியமான பொருளாதாரக் காரணக் கூறுகளில் ஒன்று ஆகுமே அல்லாமல், ஒரே ஒன்றானது அல்ல, ஏனைய யாவற்றையும் காட்டிலும் முக்கியமானதும் அல்ல. எடுத்

துக்காட்டாய், நகரங்கள் முதலாளித்துவத்தில் முக்கிய மான பொருளாதாரப் பாத்திரம் ஆற்றுகிறவை. எங்கும்—போலந்திலும் லித்துவேனியாவிலும் உக்ரேனியாவிலும் மாருஷ்யாவிலும் பிற இடங்களிலும்—தேசிய இன இயை பில் கலப்படமான மக்களைக் கொண்டிருப்பது நகரங்களுக் குரிய தனி இயல்பு. நகரங்கள், அவற்றைத் தமது பொரு ளாதாரக் கவர்ச்சி மையமாகக் கொண்ட கிராமங்களிட மிருந்தும் வட்டாரங்களிலிருந்தும் ''தேசிய இனக்'' கார ணத்துக்காக வேண்டி, துண்டித்திடுவது அபத்தமானது; இப்படிச் செய்வது சாத்தியமும் அல்ல. எனவே மார்க்சிய வாதிகள் ஏனைய யாவற்றையும் ஒதுக்கிவிட்டு முற்றிலும் ''தேசிய இன-நிலவரைக்'' கோட்பாட்டையே அடிப்படை யாகக் கொண்ட நிலையை ஏற்கக் கூடாது.

இந்தப் பிரச்சினைக்கு ருஷ்யாவின் மார்க்சியவாதிகளது கடந்த மாநாடு முன்வைத்திருக்கும் தீர்வு ஆஸ்திரியர் களுடையதைக் காட்டிலும் மிகப் பல மடங்கு சரியானது. இந்தப் பிரச்சினை குறித்து இம்மாநாடு முன்வைத்த அடிப்படைக் கருத்து:

''... விரிவான பிராந்தியத் தன்னாட்சிக்கும் (போலந் துக்கு மட்டுமல்ல, ருஷ்யாவின் எல்லாப் பிராந்தியங்களுக் கும்தான்)*, முழு அளவுக்கு ஜனநாயகமான வட்டார சுய நிர்வாகத்துக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். சுயநிர்வாக, தன்னாட்சிப் பிராந்தியங்களின் எல்லைகள் (தற்போதுள்ள மாநிலங்கள், மாவட்டங்கள் முதலானவற்றின் எல்லை களால் அல்ல, மாறாக) வட்டாரங்களில் வசிப்போராலேயே அவர்களது பொருளாதார, சமுதாய நிலைமைகள், மக்கள் தொகையின் தேசிய இன இயைபு, இன்ன பிறவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.''

வசிக்கும் மக்களது தேசிய இயைபானது இங்கே ஏனைய நிலைமைகளுக்கு (முதலாவதாக பொருளாதாரம், பிறகு சமுதாயம், இன்ன பிறவற்றுக்கு) சரிசமமான நிலை யில் அமர்த்தப்படுகிறது—அரசாங்க அதிகாரவர்க்க,

---

* வேறு விதமாகக் குறிக்கப்படாத வரை, லெனின் அளிக்கும் மேற்கோள்களில் அடைப்புகளுக்கு இடை யமைந்த இடைக்குறிப்புகள் லெனினுடையவை.—(ப-ர்.)

பிற்பட்ட ஆசிய நிலையின் தேவைகளுக்கு அல்ல, தற்கால முதலாளித்துவத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வல்ல புதிய எல்லைகளை நிர்ணயிப்பதற்கு இந்நிலைமைகள் அடிப்படையாக அமைய வேண்டும். அந்தந்த வட்டாரத்தையும் சேர்ந்த மக்களால் மட்டுமே இந்த நிலைமைகளை முழு அளவுக்குத் துல்லியமாய் ''மதிப்பிட'' முடியும். அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அரசின் மைய நாடாளுமன்றமானது தன்னுட்சிப் பிராந்தியங்களின் எல்லைகளையும் தன்னுட்சி அவைகளது அதிகார வரம்புகளையும் நிர்ணயித்தல் வேண்டும்.

* *
*

தேசிய இனங்களது சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்சினை குறித்து இனி நாம் பரிசீலித்தாக வேண்டும். இந்தப் பிரச்சினை குறித்து எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளது முழுத் தொகுதியோரும்—கலைப்புவாதி செம்கோவ்ஸ்கி, புந்துக்காரர் லீப்மன், உக்ரேனியத் தேசியவாத-சோஷலிஸ்டு லேவ் யுர்க்கேவிச்—ரோசா லுக்சம்பர்கின் தவறுகளை ''வெகுவாகப் பரப்புவதற்காக'' முனைந்து வேலை செய்கிறார்கள். இந்த முழுத் தொகுதியோராலும் அடியோடு குழப்படி செய்யப்பட்டிருக்கும் இந்தப் பிரச்சினைக்காக[25] எமது அடுத்த கட்டுரையை ஒதுக்குகிறோம்.

*1913 அக்டோபர்-டிசம்பரில் எழுதப்பட்டது*

வி.இ. லெனின்
நூல் திரட்டு,
தொகுதி 24.

முதன்முதல் 1913ல்
பிரோஸ்வெஷேனியெ சஞ்சிகையில்
10, 11, 12ஆம் இதழ்களில் வெளிவந்தது
ஒப்பம்: வி. இலீன்

# குறிப்புகள்

1 சேவெர்னயா பிராவ்தா (வடதிசை உண்மை)—*சட்ட பூர்வமான போல்ஷிவிக் நாளேடு* பிராவ்தாவின் *பெயர்களில் ஒன்று. இந்தப் பெயரில் அது 1913 ஆகஸ்டு 1 முதல் செப்டம்பர் 7 வரை வெளிவந்தது.—5.*

2 ஸைத் (காலம்) — புந்தின் *(பார்க்கவும்: குறிப்பு 7) வார ஏடு. ஹெப்ரு மொழியில் பீட்டர்ஸ்பர்கில் 1912 டிசம்பரிலிருந்து 1914 மே வரை வெளிவந்தது.—6.*

3 திஸ்வின் (மணி)—*மென்ஷிவிக் போக்குடைய சட்ட பூர்வமான மாத சஞ்சிகை. உக்ரேனிய மொழியில் கீவ் நகரில் 1913 ஜனவரியிலிருந்து 1914 நடுப் பகுதி வரை வெளிவந்தது.—6.*

4 கறுப்பு நூற்றுவர்—*புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாரிஸ்டுப் போலீசார் குற்றக் குண்டர் கும்பல்களிடமிருந்து திரட்டி நிறுவப்பட்டவர்கள். கடைக்கோடியான வலதுசாரியினரும் வெறி கொண்ட பிற்போக்கர்களும் படுகொலைக் குண்டர்களும் இவ்வாறு அழைக்கப்பட்டனர்.—6.*

5 ரூஸ்கொயெ ஸ்லோவொ (ருஷ்யச் சொல்)—*மிதவாத-முதலாளித்துவ நாளேடு. 1895ஆம் ஆண்டு முதலாய் மாஸ்கோவில் வெளியாகி வந்தது. 1917 நவம்பரில் மூடப்பட்டது.—6.*

6 ஸேம்ஸ்துவோ—*ஜார் கால ருஷ்யாவின் மத்திய மாநிலங்களில் பிரபுக் குலத்தோர் தலைமையில் 1864 முதல் நிறுவப்பட்ட வட்டார சுயநிர்வாக மன்றம்.* அதன்

அதிகாரம் முற்றிலும் வட்டாரத்துக்குரிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு (மருத்துவமனை கட்டுதல், சாலை போடுதல், புள்ளிவிவரங்கள் சேகரித்தல், காப்புறுதி முதலானவற்றுக்கு) அப்பால் செல்லாமல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதன் செயற்பாடுகள் மாநில ஆளுநர், உள்துறை அமைச்சகத்தினர் ஆகியோரது கண்காணிப்பின் கீழ் நடைபெற்றன. இவர்கள் அரசாங்கத்துக்குப் பிடிக்காத ஸேம்ஸ்துவோ தீர்மானங்கள் செயலுக்கு வராதபடி தடுத்து நிறுத்த அதிகாரம் பெற்றிருந்தனர்.—10.

7 **புந்துக்காரர்—புந்தின்** உறுப்பினர். **புந்து** என்பது ''லித்துவேனியாவையும் போலந்தையும் ருஷ்யாவையும் சேர்ந்த யூதத் தொழிலாளர்களது பொதுச் சங்கத்தின்'' சுருக்கப் பெயர். 1897ல் இது அமைக்கப்பட்டது. ருஷ்யாவின் மேற்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த யூத அரைப் பாட்டாளிப் பிரிவோராகிய கைத்தொழிலாளர்களையே பிரதானமாய் இது ஒன்றுதிரட்டியது. ருஷ்யாவின் தொழிலாளி வர்க்க இயக்கத்துள் தேசியவாதத்தையும் பிரிவினை மனப்பாங்கையும் புகுத்துவதற்காக **புந்து** நிறுவனம் பாடுபட்டு வந்தது.

1917 அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்தபின் **புந்துக்காரர்களின்** தலைவர்கள் முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ எதிர்ப்புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டு சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போராடினர். 1921 மார்ச்சில் இந்நிறுவனம் தன்னைக் கலைத்துக் கொண்டது.—12.

8 **கலாசார-தேசியத் தன்னாட்சி**—தேசிய இனப் பிரச்சினையில் சந்தர்ப்பவாத வேலைத்திட்டம் 1890ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளாகிய ஓ. பௌவரும் கா. ரென்னரும் இதனை முன்வைத்தனர். தேசிய இனங்களுக்குத் தனியே பிரிந்து செல்வது வரையிலான சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை இந்த வேலைத்திட்டம் நிராகரித்தது. இதன் சாரம் வருமாறு: அந்தந்த நாட்டிலும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தோராய் இருப்போர், அவர்கள் நாட்டின் எப்பகுதியில் வசிப்போராய் இருந்தாலும் தன்னாட்சி தேசிய இன ஒன்றியமாக ஒன்றுசேர்வார்கள். பள்ளிக்கூட விவகாரங்களையும் (வெவ்வேறு தேசிய இனத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் வெவ்வேறாகத் தனிப் பள்ளிக்கூடங்கள் நடத்துதல்), கல்வி, கலாசாரம் சம்பந்தமான பிறவற்றையும் அரசு முழு அளவுக்கு இந்த தேசிய இன

ஒன்றியங்களிடம் ஒப்படைக்கும். இந்த வேலைத் திட்டம் செயலுக்கு வந்திருந்தால் ஒவ்வொரு தேசிய இனத்துள்ளும் சமயக் குருமார்களது அதிகாரமும் பிற்போக்குத் தேசியவாதச் சித்தாந்தத்தின் செல்வாக்கும் வலுவடையவே அது உதவியிருக்கும்; தொழிலாளர்கள் தேசிய இன வழி பிரிந்து பிளவுபடுவதைக் கடுமையாக்கியிருக்கும்; தொழிலாளி வர்க்கத்தை ஒழுங்கமைப்பு பெறச் செய்யும் பணியைக் கடினமாக்கியிருக்கும்.—*18*.

9 **யூதச் சேரிகள்**—ஜார் கால ருஷ்யாவில் யூதர்கள் நிரந்தரமாய் வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட வட்டாரங்கள்.—*21*.

10 **சதவீத நியமங்கள்**—ஜார் கால ருஷ்யாவில் குறிப்பிட்ட சதவீதத்துக்கு உட்பட்டே யூதர்கள் அரசாங்க உத்தியோகங்களில் இருக்கலாம் என்றும், உயர்நிலைப் பள்ளிகளிலும் மேற்கல்வி நிலையங்களிலும் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்றும் வரம்புகள் விதிக்கப்பட்டிருந்தன.—*21*.

11 **சேர்ப்** (சோஷலிஸ்டு யூதத் தொழிலாளர் கட்சி)—குட்டிமுதலாளித்துவ தேசியவாதக் கட்சி, 1906ல் அமைக்கப்பட்டது. யூதர்களுக்குத் தேசியத் தன்னாட்சி கோருவதும், நிலவரைக்கு உட்படாத யூத நாடாளுமன்றங்கள் (செய்மங்கள்) நிறுவப்படுதலும், இவை ருஷ்யாவில் யூதர்களுக்கான அரசியல் அமைப்பு பற்றிய பிரச்சினைகள் குறித்துத் தீர்மானிப்பதற்கு முழு அதிகாரம் பெற்றிருக்க வேண்டும் என்பதும் இக்கட்சியினது வேலைத்திட்டத்தின் அடிப்படைக் கூறுகள். இக்கட்சி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுக்கு நெருங்கியதாய் இருந்தது, அவர்களோடு சேர்ந்து ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை எதிர்த்துப் போராடியது.—*33*.

12 **பேய்லிஸ் விவகாரம்**—ஜாரிஸ்டு அரசாங்கம் யூதர்களுக்கு எதிராய் ஆத்திர மூட்டுவதற்காக 1913ல் கீவில் ஏற்பாடு செய்த வழக்கு. யூதச் சடங்குக்காக யுஷ்சின்ஸ்கி என்ற கிறிஸ்தவச் சிறுவனைக் கொலை புரிந்ததாக பேய்லிஸ் என்ற யூதர் மீது பொய்க் குற்றம் சாட்டப்பட்டது (உண்மையில் இந்தக் கொலைக்கு ஏற்பாடு செய்தவர்கள் கறுப்பு நூற்றுவர்கள்). யூதர்களுக்கு எதிராய் ஆத்திரமூட்டி யூதப் படுகொலைகளைத் தூண்டிவிட்டு, மும்முரமாகி வந்த புரட்சி இயக்கத்திலிருந்து மக்கள்

பெருந் திரளினரைத் திசை திருப்பி விடுவதே இந்த வழக்கு சோடனையின் நோக்கம். இந்த வழக்கு பொது மக்களைக் கிளர்த்தி விட்டது, பல நகரங்களில் தொழிலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். பேய்லிசுக்குக் குற்ற விடுதலைத் தீர்ப்பளிக்கப்பட்டது. —36.

13 கலைப்புவாதிகள்—*1905-07*ஆம் ஆண்டுகளின் புரட்சி தோல்வியடைந்த பின் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் சந்தர்ப்பவாதப் பிரிவினரான மென்ஷிவிக்குகளிடையே பரவிய ஒரு போக்கின் ஆதரவாளர்கள்.

சட்டவிரோதமான புரட்சிகரத் தொழிலாளி வர்க்கக் கட்சி கலைக்கப்பட வேண்டுமென்று கலைப்புவாதிகள் கோரினர். தொழிலாளி வர்க்கத்தின் போராட்டக் கட்சிக்குப் பதிலாய், ஜார் அரசாங்கம் அனுமதிக்கக் கூடிய நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடும்படியான சட்டபூர்வமான சந்தர்ப்பவாதக் கட்சியை நிறுவத் திட்டமிட்டனர். இந்தக் கலைப்புவாதிகள் புரட்சி இலட்சியத்தின் துரோகிகள் ஆவர் என்பதை லெனினும் ஏனைய போல்ஷிவிக்குகளும் ஓயாமல் அம்பலப்படுத்தினார்கள். தொழிலாளர் பெருந் திரளினரிடையே கலைப்புவாதிகள் வெற்றி பெற முடியவில்லை. *1912* ஜனவரியில் பிராக் நகரில் நடைபெற்ற ரு.ச.ஜ.தொ. கட்சி மாநாடு, கலைப்புவாதிகளைக் கட்சியிலிருந்து விலக்கி வெளியேற்றியது.—*37*.

14 சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்—ருஷ்யாவில் *1901* இறுதியிலும் *1902* துவக்கத்திலும் நிறுவப்பட்ட குட்டி முதலாளித்துவக் கட்சியின் உறுப்பினர்கள். ஆரம்பத்தில் விவசாயிகளது ஜனநாயகக் கோரிக்கைகளையும் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்ற அவர்களது ஆவலையும் பிரதிபலித்து வந்த சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், நாளாவட்டத்தில் முதலாளித்துவ மிதவாதத்தின் நிலைக்குச் சரிந்து சென்றனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு (*1917*) பிறகு வெளிப்படையாகவே எதிர்ப்புரட்சிக் கட்சி ஆயினர்.

சோஷலிஸ்டு-புரட்சியாளர்களது உலகக் கண்ணோட்டம் கதம்பத் திரட்டானது. சமுதாய வளர்ச்சி விதிகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை; பாட்டாளி வர்க்கத்துக்கு உள்ள வரலாற்றுப் பாத்திரத்தை நிராகரித்தனர்; விமர்சனக் கருத்துக்களைக் கொண்ட ''தனிநபர்

களையும்'', வீரர்களையும் மனிதகுலத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடியவராய் மெச்சிப் புகழ்ந்தனர்; வெகு ஜனங்களுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை உதாசீனம் செய்துவிட்டு, அரசியலில் சிறிதும் நிலையற்றதான சாகசவாதத்தைக் கையாண்டனர். —37.

15 போலந்து சோஷலிஸ்டுக் கட்சி—*1892ல் நிறுவப்பட்ட சீர்திருத்தவாத, தேசியவாதக் கட்சி.*

*1906ல் இக்கட்சி இடதுசாரிப் பிரிவாகவும் தேசிய வெறி கொண்ட வலதுசாரியாகவும் பிளவுண்டது. ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் போதும் (1914—1918), அதற்குப் பிறகும் வலதுசாரிப் பிரிவு தனது தேசிய வெறிக் கொள்கையைத் தொடர்ந்து அனுசரித்துச் சென்றது.—37.*

16 லூச் (கதிர்)—*மென்ஷிவிக்குகளும் கலைப்புவாதிகளுமானோரின் சட்டபூர்வமான நாளேடு. 1912 செப்டம்பரிலிருந்து 1913 ஜூலை வரை பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது. உண்மையில் ''முதலாளித்துவ வர்க்கத்தில் தமது பணக்கார நண்பர்களது கைக்கருவியாக'' (லெனின்) செயல்பட்டது.—37.*

17 பிரோஸ்வெஷேனியெ (அறிவொளி) — *சட்டபூர்வமான போல்ஷிவிக்குத் தத்துவார்த்த மாத இதழ்; 1911 டிசம்பரிலிருந்து 1914 ஜூன் வரை பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது.—37.*

18 பெர்ன்ஷ்டைனியம் — *ஜெர்மன் சமூக-ஜனநாயகத்திலும் சர்வதேச சமூக-ஜனநாயகத்திலும் எழுந்த மார்க்சிய-எதிர்ப்புப் போக்கு. இது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனியில் உதித்தது. சந்தர்ப்பவாதத்தின் சித்தாந்தவாதியான ஜெர்மன சமூக-ஜனநாயகவாதி எடுவார்டு பெர்ன்ஷ்டைன் மூலவராகக் கொண்டிருந்ததால் அவரது பெயரைப் பெறலாயிற்று.*

*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளது தத்துவார்த்த ஏடாகிய Die Neue Zeit* (புதிய காலம்) *சஞ்சிகையில் 1896—1898ஆம் ஆண்டுகளில் தொடர் கட்டுரைகள் எழுதி, ''சுதந்திர விமர்சனம்'' என்ற பெயரில், புரட்சிகர மார்க்சியத்தின் தத்துவவியல், பொருளாதார, அரசியல் அடிப்படைகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்தித் திருத்துவதற்காகவும்* (இதிலிருந்துதான் இந்தப் போக்கு ''திருத்தல்வாதம்'' *என்ற பெயரைப் பெற*

லாயிற்று), இந்த அடிப்படைகளை வர்க்க முரண்பாடுகளுக்கு சமரசம் காண்பதற்கும், வர்க்கங்களது ஒத்துழைப்புக்குமான முதலாளித்துவத் தத்துவங்களாக மாற்றியமைப்பதற்கும் முயற்சி செய்தார். பெர்ன்ஷ்டைனுடைய கருத்துக்களுக்கு ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தைச் சேர்ந்த வலதுசாரியிடமிருந்தும், ஏனைய நாடுகளின் சமூக-ஜனநாயகக் கட்சிகளின் சந்தர்ப்பவாதக் கூறுகளிடமிருந்தும் ஆதரவு கிடைத்தது.—38.

19 லெனின் இங்கு குறிப்பிடுவது ஸ்டாலினது கட்டுரையான மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சினையும். இது தேசிய இனப் பிரச்சினையும் சமூக-ஜனநாயகமும் என்ற தலைப்பில் 1913ல் பிரோஸ்வெஷேனியெ இதழ்கள் 3, 4, 5ல் வெளிவந்தது. ஆஸ்திரிய சமூக-ஜனநாயகக் கட்சியின் புரூன் காங்கிரசால் ஏற்கப்பட்ட தேசிய இன வேலைத்திட்டத்தின் வாசகம் ஸ்டாலின் கட்டுரையின் 4ஆவது பிரிவில் தரப்படுகிறது.—39.

20 நோவயா ரபோச்சயா கஸெத்தா (புதிய தொழிலாளர் ஏடு)—மென்ஷிவிக் கலைப்புவாதிகளது சட்டபூர்வமான நாளேடு. 1913 ஆகஸ்டு முதல் பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது. 1914 ஜனவரி 30லிருந்து (பிப்ரவரி 12) இது சேவெர்னயா ரபோச்சயா கஸெத்தா (வடதிசை தொழிலாளர் ஏடு) என்ற பெயரிலும், பிறகு நாஷா ரபோச்சயா கஸெத்தா (நமது தொழிலாளர் ஏடு) என்ற பெயரிலும் வெளிவந்தது. லெனின் இந்த ஏட்டை அடிக்கடி நோவயா லிக்விதாட்டர்ஸ்கயா கஸெத்தா (புதிய கலைப்புவாத ஏடு) என்று குறிப்பிட்டு வந்தார்.—40.

21 காடேட்டுகள்—அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள். இக்கட்சி ருஷ்யாவின் மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தாரின் தலைமையான கட்சியாய் இருந்தது. காடேட்டுகளின் கட்சி 1905 அக்டோபரில் நிறுவப்பட்டதாகும். உழைப்பாளிப் பெருந்திரளினரை ஏமாற்றுவதற்காக காடேட்டுகள் தமது கட்சியை "மக்கள் சுதந்திரக் கட்சி" என்று அழைத்துக் கொண்டனர், ஆனல் அரசியல் சட்டமுறை முடியரசு வேண்டுமெனக் கோருவதற்கு மேல் அவர்கள் செல்லவில்லை. அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றிபெற்றதும் காடேட்டுகள் ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள், தலையீட்டாளர்களது இராணுவத் தாக்குதல்கள் ஆகிய யாவற்றிலும் பங்கெடுத்துக் கொண்டனர்.—42.

[22] லெனின் இங்கு குறிப்பிடுவது ரு.ச.ஜ.தொ. கட்சி மத்தியக் கமிட்டி, கட்சி ஊழியர்களுடன் சேர்ந்து கிராக்கோவுக்கு அருகில் பொரோனின் என்னும் இடத்தில் 1913 செப்டம்பர் 23லிருந்து அக்டோபர் 1 வரை நடத்திய கலந்தாய்வுக் கூட்டம். இரகசியத்தை முன்னிட்டு ''ஆகஸ்டு'' (''கோடை'') கூட்டம் என்பதாய் இது குறிக்கப்பட்டு வந்தது. தேசிய இனப் பிரச்சினை குறித்து இதனால் ஏற்கப்பட்ட தீர்மானம் லெனினால் வரையப்பட்டதாகும்.—46-47.

[23] **பிரஸெகிளாத் சோஷல் தெமாக்கிரத்துச்னு** (சமூக-ஜனநாயக குறிப்பேடு)—ரோஸா லுக்சம்பர்கின் நெருங்கிய ஒத்துழைப்புடன் போலிஷ் சமூக-ஜனநாயகவாதிகள் கிராக்கோவ் நகரில் 1902 முதல் 1904 வரையிலும் பிறகு 1908 முதல் 1910 வரையிலும் வெளியிட்ட சஞ்சிகை.—51.

[24] **வெஸ்த்னிக் எவ்ரோப்பு** (ஐரோப்பிய தூதன்)—முதலாளித்துவ மிதவாதப் போக்கு கொண்ட வரலாற்று, அரசியல், இலக்கிய மாத சஞ்சிகை. பீட்டர்ஸ்பர்கில் 1866லிருந்து 1918 வரை வெளிவந்தது. மார்க்சியவாதிகளுக்கு நேர் எதிரான போக்குடைய கட்டுரைகள் இந்த சஞ்சிகையில் வெளியாயின.—56.

[25] லெனின் இங்கு குறிப்பிடுவது **தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை** குறித்து அவர் எழுதத் திட்டமிட்டிருந்த கட்டுரை. 1914 பிப்ரவரிமே மாதங்களில் அவர் இதை எழுதினார், **பிரோஸ்வெஷேனியெ** இதழ்கள் 4,5, 6ல் ஏப்ரல்-ஜூனில் இது வெளிவந்தது.—59.

-5 MAY 1985

## பெயர்க் குறிப்பகராதி


எல்லென்போகென், வில்கெல்ம் *(பி. 1863) — ஆஸ்திரிய சமூக-ஜனநாயகத்தின் திரிபுவாதத் தலைவர்களில் ஒருவர்.—39.*

காவுத்ஸ்கி, கார்ல் *(1854—1938)—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். ஆரம்பத்தில் மார்க்சிஸ்டு, பின்னர் மார்க்சியத்துக்கு துரோகம் புரிந்தவர். சந்தர்ப்பவாதத்தின் மிக ஆபத்தான, தீய வகையான நடுநிலைவாதத்தின் (காவுத்ஸ்கிவாதம்) சித்தாந்தவாதி.—21, 44.*

கிரிஸ்தான் எத்பின் *(1867—1953)—ஸ்லொவேனிய அரசியல் பிரமுகர், எழுத்தாளர், பத்திரிகையாளர்.—39.*

குச்கோவ், அலெக்சாந்தர் இவானவிச் *(1862—1936)—பெரிய ருஷ்ய முதலாளி. முதலாளித்துவ வர்க்கத்தின் அக்டோபரிஸ்டுகள் கட்சியின் நிறுவகர், தலைவர்.—27.*

கோல்த்பிளாத் (மெதெம் வி.தி.) *(1879—1923)*—புந்துத் *தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் (1917) போலந்தில்* புந்து *நிறுவனங்களின் தலைவராக இருந்தவர்.—55, 56.*

சக்கலோவ்ஸ்கி, (பசோக்) எம். இ. *(1879—1938)—உக்ரேனிய குட்டி முதலாளித்துவ தேசியவாதி, மென்ஷிவிக். முதல் உலகப் போரின் போது (1914—1918) ஜெர்மானிய ஆதரவு அமைப்பான ''உக்ரேனிய விடுதலைக் கழகத்தின்'' உறுப்பினர். அக்டோபர் சோஷ*

லிஸ்டுப் புரட்சிக்குப் பின் (1917) பொருளாதார வேலை யில் ஈடுபட்டவர்.—23.

செம்கோவ்ஸ்கி (புரோன்ஷ்டைன், மேமோன் யூலியெவிச்) (பி. 1882)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக், மென்ஷிவிக் பத்திரிகைகள் பலவற்றில் பணியாற்றி யவர். தேசியப் பிரச்சினையிலும் பிறவற்றிலும் செம் கோவ்ஸ்கியின் நிலையை தமது நூல்கள் பலவற்றில் வி. இ. லெனின் கடுமையாக விமர்சனம் செய்தார். —40, 44, 59.

செர்னிஷேவ்ஸ்கி, நிகலாய் கவ்ரீலவிச் (1828—1889)— ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, கற்பனை சோஷ லிஸ்டு, விஞ்ஞானி, எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், ருஷ்ய சமூக - ஜனநாயகத்தின் முன்னோடிகளில் தலை சிறந்தவர்களில் ஒருவர். ருஷ்யாவில் 60ஆம் ஆண்டு களில் புரட்சிகர ஜனநாயக இயக்கத்தின் சித்தாந்தத் தூணாகவும் தலைவராகவும் இருந்தவர்.—27.

திரகமானவ், மிகயீல் பெத்ரோவிச் (1841—1895)— உக்ரேனிய வரலாற்றாசிரியர், மானிடவியல் நிபுணர், பொது விவகாரக் கட்டுரையாளர். உக்ரேனிய தேசிய விடுதலை இயக்கத்தின் மிதவாதப் பிரிவின் பிரபலமான தலைவர்களில் ஒருவர். ''கலாசார-தேசியத் தன்னாட்சி'' வேண்டுமென்று கோரியவர்.—50.

துகான்-பரனோவ்ஸ்கி, மிகயீல் இவானவிச் (1865—1919) —ருஷ்யப் பொருளியலாளர். ''சட்டபூர்வ மார்க்சியத் தின்'' முக்கிய பிரமுகர்களில் ஒருவர்.—38.

தொன்த்ஸோவ், திமித்ரோ — குட்டி முதலாளித்துவ உக் ரேனிய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர். முதல் உலகப் போரின் போது (1914— 1918) தேசியவாத நிறுவனமான ''உக்ரேனிய விடுதலைக் கழகத்தின்'' நிறுவகர்களில் ஒருவராக இருந்தார். ஆஸ் திரிய முடியரசின் உதவியுடன் ''சுதந்திர'' உக்ரேனியா எனும் கோஷத்தை நிறைவேற்ற முனைந்தது இந்த நிறு வனம். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு (1917) வெளிநாட்டில் குடியேறியவர்.—21, 26.

பிளெஹானவ், கியோர்கி வலென்தீனவிச் (1856—1918) —ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலை சிறந்த பிரமுகர். மார்க்சியத்தை ருஷ்யாவில் முதன்

முதலில் பிரசாரம் செய்தவர். ரு.ச.ஜ.தொ.க.யின் இரண்டாவது காங்கிரசுக்குப் பின் (1903) சந்தர்ப்ப வாதத்துடன் சமரசம் செய்து கொள்ள வேண்டும் எனும் நிலையை மேற்கொண்டார், பின்னர் மென்ஷிவிக்குக ளுடன் சேர்ந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியை ஆதரிக்கவில்லை. ஆனால் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. பிளெ ஹானவின் தத்துவஞான நூல்களையும், ருஷ்யாவில் மார்க்சியத்தைப் பரப்புவதில் அவர் புரிந்த பணியையும் உயர்வாக மதித்தார் லெனின். அதே நேரத்தில் பிளெ ஹானவ் மார்க்சியத்திலிருந்து பின்வாங்கியதையும் அரசியல் பணிகளில் அவர் புரிந்த தவறுகளையும் அவர் தீவிரமாகச் சாடினார்.—27.

**புரிஷ்கேவிச், விளடீமிர் மித்ரஃபானவிச்** *(1870—1920)* —ருஷ்யப் பெரு நிலப்பிரபு, முடியரசுவாதி. 1905—1907ல் கறுப்பு நூற்றுவர் குண்டர் நிறுவனங்களை நிறுவியவர்களில் ஒருவர். புரட்சி இயக்கத்துக்கு எதிராகப் போராடுவதற்காக இந்நிறுவனங்கள் உரு வாக்கப்பட்டன.—9, 16, 21, 27, 36.

**புருதோன், பியேர் ஜோசஃப்** *(1809—1865)*—பிரெஞ்சுப் பொதுவிவகாரக் கட்டுரையாளர், பொருளியலாளர், சமூகவியலாளர், குட்டி முதலாளித்துவச் சித்தாந்த வாதி, அராஜகவாதத்தின் நிறுவகர்களில் ஒருவர். புருதோன் சிறு சொத்துடைமையை காலகாலத்துக்கும் நிலைநிறுத்துவதற்குக் கனவு கண்டார், குட்டி முத லாளித்துவ நிலைகளிலிருந்து பெரிய முதலாளித்துவச் சொத்துடைமைகளை விமர்சனம் செய்தார். வர்க்க முரண்பாடுகளுக்குப் பிரதான ஊற்றுக்கண்ணாக இருப் பது அரசே என்று புருதோன் கருதினார், ''அரசுக் கலைப் புக்கான'' கற்பனை பூர்வச் சமாதானத் திட்டத்தை முன்வைத்தார், அரசியல் போராட்டத்தை எதிர்மறை யாக அணுக வேண்டும் என்று போதித்தார். தேசியப் பிரச்சினையில் கூட புருதோனும் அவரது ஆதரவாளர் களும் மிகவும் தவறான நிலையை மேற்கொண்டனர். ''தேசியம்'', ''தேசம்'' என்பதெல்லாம் ஏதோ ''காலாவதியாகிப் போன தப்பெண்ணங்கள்'' என்று அடித்துக் கூறி ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் நடத்திய தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கு எதி ராகப் போராடினர்.

**மெய்யறிவின் வறுமை** எனும் நூலிலும் பிறவற்றி லும் புருதோனிசத் தத்துவமும் அரசியல் கண்ணோட்

டங்களும் விஞ்ஞான விரோதமானவை, பிற்போக்குத் தன்மை வாய்ந்தவை என்று காட்டி அவற்றைக் கடுமையாக விமர்சனம் செய்தார் கார்ல் மார்க்ஸ்.—*29.30.*

பெர்தியாயெவ், நிகலாய் அலெக்சாந்திரவிச் *(1874—1948)*—ருஷ்யக் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி. தமது முதல் இலக்கிய நூல்களில் ''சட்டபூர்வ மார்க்சிய'' நிலையை மேற்கொண்டிருந்தவர்.—*38.*

பௌவர், ஓட்டோ *(1882—1938)*—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகம், இரண்டாம் அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். சீர்திருத்தவாதங்களில் ஒரு விதமான ''ஆஸ்திரிய-மார்க்சியம்'' என்று அழைக்கப்படுகிற ஒன்றின் சித்தாந்தவாதி. ''கலாசார-தேசியத் தன்னாட்சி'' எனும் முதலாளித்துவ-தேசியவாதத் தத்துவத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராய் இருந்தவர்.—*21, 37.*

மானின், எஸ். எல்., புந்துக்காரர், மென்ஷிவிக்-கலைப்புவாதிகளின் லூச் எனும் பத்திரிகையில் பணி புரிந்தார்.—*37.*

மெதெம்—பார்க்க: கோல்த்பிளாத்

யுர்க்கேவிச், லேவ் *(1885—1918)*—உக்ரேனிய முதலாளித்துவ தேசியவாதி, சந்தர்ப்பவாதி. *1913—1914*ல் திஸ்வின் (மணி) எனும் மென்ஷிவிக் போக்கு கொண்ட தேசியவாதப் பத்திரிகையில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவர்.—*6, 21, 23, 24, 26, 38, 59.*

லீப்மன், எஃப். (கோர்ஷ், பெய்ஸாஹ்) *(பி.1882)*—பிரபலமான புந்துக்காரர். *1911*ல் புந்து நிறுவன மத்தியக் கமிட்டி உறுப்பினர், கலைப்புவாதிகளுடன் சேர்ந்தவர். முதல் உலகப் போரின் போது *(1914—1918)* ஜார் அரசின் பிரதேச இணைப்புக் கொள்கையை ஆதரித்தவர்.—*6, 12, 18, 20, 40, 44-46, 48, 49, 59.*

லுக்கஷேவிச் (துச்சாப்ஸ்கி, பி. எல்.)—*(1869—1922)*—உக்ரேனிய தேசிய-மிதவாதி.—*23.*

லுக்சம்பர்க், ரோசா *(1871—1919)*—ஜெர்மானிய, போலிஷ், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலை

சிறந்த பிரமுகர். இரண்டாம் அகிலத்தின் இடதுசாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர்.

ரோ. லுக்சம்பர்கை உயர்வாக மதித்த வி.இ. லெனின் அவர் புரிந்த தவறுகளை அடிக்கடி விமர்சனம் செய்தார். இவ்வாறு சரியான நிலையை மேற்கொள்வதற்கு அவருக்கு உதவினார்.—*51-55, 59.*

**ஸ்துருவே, பியோத்தர் பெர்ன்கார்தவிச்** *(1870—1944)* —ருஷ்யப் பொருளியலாளர், பொது விவகாரக் கட்டுரையாளர். 90ஆம் ஆண்டுகளில் "சட்டபூர்வ மார்க்சியத்தின்" தலைசிறந்த பிரதிநிதி. பின்னர் காடேட்டுகளின் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு *(1917)* எதிர்ப்புரட்சித் தலைவர்களில் ஒருவர், வெளிநாட்டுக்கு ஓடியவர்.—*16, 27, 38.*

- 5 MAR 1985

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

---

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-B, Sidco Industrial Estate, Ambattur, Madras-600098

ஷோ-ரூம்

6/30, Mount Road, Madras-600002

கிளைகள்

80, West Tower St., Madurai-625001
87/89, Oppanakara St., Coimbatore-641001
Singarathope, Tiruchirappalli-620008
Cherry Road, Salem-636001

В. И. Ленин

КРИТИЧЕСКИЕ ЗАМЕТКИ ПО НАЦИОНАЛЬНОМУ ВОПРОСУ

*на тамильском языке*